

இதழ்-08
01.09.2020
தூரிகை
பல்சுவை மின்னிதழ்
சாதிகள் இல்லையடி பாப்ப
ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதா
காலமென்ற ஒரு நினைவும் காட்சியென்ற ஒரு நினை
நலங்கெட புழுதியில் எறிவதுண்டே
வளர்வதை வீரப் பெண்கள்
பெருவெள்ளத்திற்கான பயணம்

# இலக்குகளை நோக்கி தூமி!!!

## ஆசிரியர் பதிவு


தூமி மின்னிதழ் பல்வேறு நோக்கங்களை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. சிலரை வாசிக்கவும், சிலரை எழுதவும், சிலரை தேடவும், சிலரை கீறவும், சிலரை வடிவமைக்கவும் வைத்திருக்கிறோம் என்கிற மகிழ்ச்சி நிறைந்த உந்துதலே காலங்கள் கடந்தும் எம்மை பயணிக்க வைக்கும் சக்தியை தரவல்லது. இந்த சிலர் பலராக வேண்டுமென்பதே எமது பேரவா.

அந்த பேரவாவை நியாயப்படுத்தும் வகையில் ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. முல்லைத்தீவில் சில உதவித்திட்டங்கள் செய்வதற்காக பாடசாலைகள் உட்பட சில இடங்களுக்கு சென்று வந்துள்ளோம். ஆனால் இதுவரை நாம் தொடர்புகளை பேணாத ஒரு பாடசாலை உறவுகளை தூமி மின்னிதழ் பெற்றுத்தந்திருக்கிறது.

முல்லைத்தீவு சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை பாடசாலை மாணவர்கள், பாடசாலை அதிபரின் வழிப்படுத்தலில் கணனி விரிதிரையில் தூமி இதழைப் படித்து மகிழ்ந்திருக்கிறார்கள். பல்சுவை அம்சங்களோடு, மாணவர்களுக்கும் பயனுடைய பல தகவல்களைத் தாங்கி வெளிவரும் தூமி மின்னிதழை மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் வாசித்து மகிழ்ந்ததாக, பாடசாலை அதிபர் தெரிவித்தார். நூலகத்தில் பல நூல்கள் இருந்த போதும் மாணவர்களின் வாசிப்பு ஆர்வம் குறைந்து வருவதை தான் அவதானித்ததாகவும், இலத்திரனியல் மயப்படுத்தப்பட்ட, வர்ணமயமான தூமி மின்னிதழ் மாணவர்களது வாசிப்பு ஆர்வத்தை தூண்டுவதாகவும் தன் மகிழ்ச்சியை அதிபர் பகிர்ந்து கொண்டார்.

கடந்த சில இதழ்களை வெளியிடுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்ட எமக்கு அந்த மாணவர்களின் புன்னகை புதுத்தெம்பை தருகிறது. இந்த முயற்சியை விட்டுவிடக்கூடாதென்ற பொறுப்புணர்வை தருகிறது. இந்த பத்திரிக்கைப் பயணம் ஆரம்பிக்க அடிநாதமாக இருந்த மகாகவி பாரதியாரின் நினைவு நாள் வருகின்ற வேளையில் இந்த பொறுப்புக்களையும் கடமைகளையும் உறுதி மொழிகளாக எடுத்துக் கொள்கின்றோம்.





மகாகவி பாரதியாரின் நினைவு தினம் எதிர்வரும் செப்டம்பர் 12 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது. பத்திரிக்கைத் துறையின் முன்னோடியான பாரதியாருக்கு இந்த இதழை சமர்ப்பிக்கிறோம்.

## இவ்விதழில்

# துமித்தவை.


04 சங்ககிரித்தலைவன்

06 நின்னைச் சரணடைந்தேன் கண்ணம்மா

10 குறுக்கெழுத்துப்போட்டி

11 வலம்புரிச்சங்கு

12 புற்றுநோய்

15 பாரதி என் காதலன்

16 இன்னொரு ஆண்டாள்

19 முயற்சி தன் மெய் வருத்த கூலி தரும்.

22 கண்மணி

26 The Cobra Effort

28 குடாநாட்டின் சுற்றுலா – ஆய்வுத்தொடர்

31 எங்கே செல்கிறோம் நாம்?

32 சித்திராங்கதா

35 வழுக்கியாறு – ஆய்வுத்தொடர்

37 சீதனம்

39 என் இதயம் எழுதும் சொல்

41 யுவராஜ் எனும் யுகவீரன்



துமி பல்சுவை மின்னிதழ்

thumi2016@gmail.com

www.facebook.com/Thumi06

## மொக்கலானா என்ற முகலன்

பூவும் காயும் கனியுமாக செழித்திருந்தது அனுராதபுர அரண்மனைச்சோலை!

எங்கும் இயற்கை அன்னை தன் அழகை வஞ்சகம் இல்லாமல் வாரி இறைத்துக் கொண்டிருந்தாள்...

தூரத்தே ஓடி வரும் அந்தக் கிளை நதி தான் அள்ளிவந்த குளிர்காற்றை எட்டி வீசி விட்டு வடக்கு நோக்கி ஓடியது...

மாமரத்தில் குடியிருக்கும் அணில்களின் சத்தமும் அவற்றோடு போட்டிபோட்டுகொண்ட குருவிகளின் சத்தமும் சேர்ந்து புதிய கீதம் ஒன்றை அந்தச் சோலையில் பரவச்செய்துகொண்டு இருந்தது!

நாடு இருந்த நிலையில் எந்தக் கீதமும் சோக கீதமாகவே எல்லோருக்கும் கேட்டது!

சோலையின் அக்கரையில் நதியும் இக்கரையில் அரண்மனையுமாக அழகு சேர்த்தது.

அழகிய மாடங்களோடு, அனுராதபுர அரண்மனை கிழக்கு நோக்கி அமைக்கப் பட்டிருந்தது!

அரண்மனையின் பிரத்தியேக மண்டபத்தில் மன்னர் தாதுசேனர் பிரமை பிடித்தவர் போல கத்தரிக்கப்பட்ட தன் தாடியைத் தடவியபடி அமர்ந்திருந்தார்!

"மன்னிக்க மன்னா!.... தங்கள் புதல்வர் தங்களை காண வந்துள்ளார்!"

தயங்கி நுழைந்த அந்த வாயிற்காவலன் விடயத்தைக் கூறி கைகூப்பி நின்றான்.

"உடனே வரச் சொல்!" தாதுசேனர் முகத்தில் ஆனந்த ரேகை ஓடியது!

"தந்தையே... தந்தையே..." ஒட்டமும் நடையுமாக வந்த முகலன் நெடுஞ்சாண் கிடையாக தாதுசேனரை விழுந்து வணங்கினான்!

"எழுந்திரு முகலா... பயணம் இனிதாக அமைந்ததா?"

ஜீவா ஷஜீவனின்

# சிங்ககிரித்தலைவன்

ஆட்சி 08

" தந்தையாரே... அதைப்பற்றி கூறுவது ஒருபுறமிருக்கட்டும்... நான் இல்லாதபோது ஏதேதோ நாட்டில் நடந்துவிட்டதே... என்னால் நம்பமுடியவில்லை... ஆரியசேனர் கொல்லப்பட்டத்தை நானறிந்தா வேளை என் இதயம் துடிக்க மறுத்துவிட்டது!!..... அண்ணா எங்கே? ஏதேனும் தகவல் உள்ளதா?"

"அண்ணா... அண்ணா... நீ தான் அந்த துரோகியை அண்ணா என அழைக்கின்றாய்... என்றாவது அவன் உன்னைத் தம்பி என அழைத்தது உண்டா?" ஏளன புன்னகை மன்னன் முகத்தில் தோன்றி வாடியது...

"அப்படி கூறாதீர்கள் தந்தையே... நான் அண்ணன் மீது கொண்டுள்ள அக்கறையையும் அன்பையும் நிச்சயம் அவன் ஒரு நாளில் அறிவான்..! அனைவர் மீதும் அன்பு செலுத்துவதுதானே பௌத்த நெறி!"

"என் காமத்தின் பயனாக காசியப்பனை மகனாய் பெற்றேன்!... என்றோ நான் செய்த தவத்தின் பயனாக உன்னை மகனாக அடைந்தேன்!"

முகலன் மன்னனின் கால்களைப் பற்றிக் கொண்டான்!

“பெரிய வார்த்தைகள் கூறாதீர்கள் அப்பா... அண்ணன் ஆத்திரம் கொண்டது நியாயம்தான் ஆட்சி உரிமை முறைப்படி அவனுக்கே உரியது... மூத்தவன் இருக்க நான் அரியணை ஏறுவது முறையல்ல!" தன் மகனை தூக்கி மார்போடு அணைத்துக் கொண்ட தாதுசேனன் அன்பாக அவனின் தலையை தடவினார்...

பின் அவனை விடுத்து மெல்ல நடந்து சென்று மாடத்திலே சாந்த சொரூபியாய் கண்மூடி அபய முத்திரை காட்டி அமர்ந்திருந்த புத்தர் சிலை அருகே சென்று நாயகனை பார்த்தபடி நின்றார்!



“மூத்தவன் அவன் தான்! எனினும் அவனின் தாய்... அரச வம்சத்தவள் இல்லையே! அரசு சட்ட திட்டங்களுக்கு அமைய நீயே முடிசூடிக் கொள்ள வேண்டும்! காசியப்பன் பிராந்திய மன்னனாக வேண்டும்! இவை ஆரியசேனரால் முன்மொழியப்பட்டவை!... எனினும் அரியணை ஆசையில் அந்தப்பாவி அவர் உயிரை எடுத்தான்! இதுவே அரச நியதி இதற்கு நீ உடன்படுவதே முறை!"

இந்த வார்த்தைகளால் முகலன் திருப்தியடையாதவானாக முகம்கோணிகொண்டான்!

"தந்தையே தங்களுக்கு ஆலோசனை கூறும் அளவிற்கு நான் பெரியவன் அல்ல... எனினும் என் தாயே கூறியபோதும்... வாய்ப்புக்கள் எல்லாம் இருந்தும், நாட்டு ஆட்சி பொறுப்பு ஏற்காது தன் அண்ணனை நாடி ஓடிய பராதனைப் போல் இருக்க ஆசைப்படுகிறேன்!"

தாதுசேனரின் முகத்தில் ஆச்சரியநிழலாடியது!

"மகனே காசியப்பன் ராமன் இல்லை என்பதை நான் சொல்லி நீ அறிய வேண்டியது இல்லை!"

முகலன் மௌனித்து நின்றான்... தாதுசேனர் முகலனின் தோளைப் பற்றிக்கொண்டு, "அன்பு மகனே... இதற்குமேல் துன்பங்களை என்னால் தாங்கிக்கொள்ள முடியாது!... விரைந்து நீ அரியாசனம் ஏறவேண்டும்! உனக்கு அதற்கான தகுதி வந்துவிட்டதை, நான் அனுப்பிய காவலர்களை கூட நீ திருப்பி அனுப்பி வடக்கே பயணம் போனதில் இருந்து அறிந்துகொண்டேன்! நாட்டை ஆள வேண்டியவனிடத்தில் தன்னிச்சையாக சவால்களை எதிர்கொள்ளும் திறன் அவசியம்... ஆசையும் கோவமும் கூடாது! அதனாலே தான் காசியப்பன் மிருகம்போல் ஆனான்..." முகலன் கவலை தோய்ந்த முகத்தோடு தாதுசேனரைப் பார்த்தான். "நீ சென்று ஓய்வெடு...."எல்லாம் போதிமாதவன் ஆணைப்படி நடக்கட்டும்!" என்று சொல்லி முடிப்பதற்குள் ஒரு குத்தீட்டி காற்றைக் கிழித்து வந்து தாதுசேனரின் கழுத்ததோடு உரசிப்போய் அப்பாலே விழுந்தது!

ஈட்டி பாயும்....

# நின்னை சரணடைந்தேன் கண்ணம்மா!.

காதலிகளுக்கென்றே ஒரு பொதுப்பெயர் இருக்கிறது. அது "கண்ணம்மா". மனித உடலில் இந்த உலக இன்பங்கள் யாவற்றையும் சுகிக்கும் முக்கிய அங்கமாக "கண்" இருக்கிறது. உறவின் இன்பங்கள் யாவும் "தாய்" வழி வருவது. அம்மா சொன்னால் தான் அப்பா யார் என்றே தெரிய வரும். இவனது உடலோடு உலகை இணைத்து உணர்வை வளர்க்கும் கண்ணாகவும், உணர்வோடு உறவையும் தன் உடலையும் இணைத்து பந்தம் வளர்க்கும் அம்மா ஆகவும் "காதலியே" ஒரு ஆடவனுக்கு வாழ்வாகிறாள். இப்படியாக வாழ்வுக்கு வழி காட்டும் காதல் மனைவியை "கண்ணம்மா" என்ற காரண பெயராக அழைக்கிறான் பாரதி.

இ.தனிஷ்ரன்

தன்னுடைய கண்ணம்மாவை கண்டுகொண்ட ஒருத்தன்,



//காற்று வெளியிடை
கண்ணம்மா - நின்றன்
காதலை எண்ணிக்
களிக்கின்றேன் -
அமுது
ஊற்றினை ஒத்த
இதழ்களும் - நிலவு
ஊறித் ததும்பும்
விழிகளும் - பத்து//

காதல் சங்கிலியிலே கட்டுண்டு எங்கோ வானவெளியில் மிதப்பதாய் காதலனுக்கு காதல் பெருக்கெடுத்து பாய்கிறது. முப்பொழுதும் அவள் கற்பனைகள்.

காதல் என்றால் என்ன? இது வருவதற்கான காரணிகள் என்ன? இது ஒரு "நோய்" என்றே விழிக்கப்படுவது எதனால்? இந்த நோயின் அறிகுறிகள் என்ன என்ன? நோயென்ற படியால் இது குணமடைய வேண்டுமே? ஆக காதல் தீர்ந்து விட கூடியது தானா? இல்லை கவிகளில் புகழ்வது போல சாகும் வரை நீள்வதா?

காதலில் விழாதவர்க்கும் காதலில் விழுந்தவர்க்கும் காதலாகி கல்யாணம் செய்தவர்க்கும் இடையில் காதல் கசந்தவர்க்கும் யாருக்குமே “காதல்” என்றால் என்ன என்றே புரிவதில்லை. புரிந்தால் அது காதலும் இல்லை.

தோழி ஒருத்தி கிறுக்கிய இந்த கவிதையை பாருங்கள்! ஏதேனும் விளங்கலாம்.

"விழி வழி வஞ்சியவள் நெஞ்சை தைக்கும்
இமை வெட்டாமல் இதழ் நோக்க செய்யும்
ஊசி குத்தும் உளக்கிளர்ச்சியை உண்டு பண்ணும்
இதயத்தை இதமாகவும் கனமாகவும் இயக்கும்
மதுபானமின்றி மதி மயக்கும் மன்மத பானம்!
மானிடா! மையல் என்பார்
மூட கவிஞர்
மூளைக்குள் மின்சுற்று
என்பார் மருத்துவ மாணவர்!
ஒருயிர் ஈருடல் என்பார்
ஒட்சிடோசின் ஓயும் வரை
நீயென்பதே நான் என்பார்
நியூரோ ரான்ஸ்மிட்டர் தீரும்
வரை -ஆயினும்
விஞ்ஞானத்திற்கு
உட்பட்டதோ
விவரணத்திற்கு
அப்பாற்பட்டதோ
கைலாச விருட்சத்தின்
வேராம் அது- காதல்!"

கைலாச விருட்சத்தின் வேர்! கைலாசம் என்ற ஒன்று இருந்து அங்கே ஒரு விருட்சம் இருந்து அதற்கு வேர் என்ற ஒன்று இருந்து அது நீளும் வழி கண்டு!

குழப்புகிறதா! அது தான்! அதே தான் காதல்.

இந்த காதல் பற்றி விஞ்ஞானம் என்ன சொல்கிறது தெரியுமா?

இந்த இழவை பற்றியெல்லாம் விஞ்ஞானிகள் பெரும் ஆராய்ச்சி எதிலும் இறங்கவில்லை. அதுவே ஒரு குழப்பமான உணர்வு. இந்நிலையில் இதில் ஆராய்ச்சி செய்தால் தாங்களும் குழம்பிவிடுவோம் என்ற எச்சரிக்கை போலும்!

எளிமையாக சொன்னால் காதல் என்பது ஓமோன்களின் ஆர்ப்பரிப்பின் உச்சம். ஒக்சிடோசின், டோபாமைன், செரொட்டோனின், நோர்எபிநெப்ரின் இந்த நாலும் கலந்து ஆடும் நர்த்தனம் தான் காதல்.

"காதல் ஒண்ணியும் கடவுள் இல்லையடா
இந்த இழவு எல்லாம் ஹார்மோன் செய்யும் கலகம் தானடா"

ஆண்கள் சீக்கிரமே காதல் வசப்பட்டு விடுகிறார்கள். ஆண்களில் காதலில் காமத்தின் தேவையும் கலந்தேயிருப்பதால் அது தான் விரும்பி கற்பனை செய்து வைத்திருக்கும் அழகைத் தான் தேடுகிறது. அப்படியான ஒருத்தியை கண்டதும் காதல்!

//சுட்டும் விழிச் சுடர் தான் கண்ணம்மா சூரிய சந்திரரோ
வட்டக் கரிய விழி கண்ணம்மா
வானக்கருமை கொலோ
பட்டுக் கருநீலப் புடவை பதித்த நல்வயிரம்
நட்ட நடுநிசியில் தெரியும் நட்சத்திரங்களடீ//



பெண்கள் இப்படியல்ல. அவர்கள் தீர யோசித்து, இவன் நம்முடன் கூடவே இருப்பானா நம்மை காப்பாற்றுவானா என்ற 'நம்பிக்கை உணர்வு' பிறந்த பிறகு தான் ஹார்மோனின் கட்டுப்பாட்டினுள்ளேயே தங்களை தருகிறார்கள்.



//பாயு மொளி நீ யெனக்கு,
பார்க்கும் விழி நானுனக்கு,
தோயும் மது நீ யெனக்கு,
தும்பியடி நானுனக்கு//

இந்த வாய் வார்த்தைகள் அத்தனையும் தாண்டி அவர்களுக்குள் "இவன் எனக்கானவன்" என்ற உணர்வு தோன்றும் போது தான் "சம்மதம்" தருகிறார்கள்.

வேடிக்கை என்னவென்றால் ஓமோன்களின் உடனடி திடீர் கொப்பளிப்பில் 'மானே தேனே மயிலே குயிலே' என்ற காதலனின் கூச்சல் பல சமயங்களில் காமம் தீரும் போது முடிந்து விடுகிறது. தீர்க்கமாக சிந்தித்து காதல் கொண்ட காதலியின் காதல் காமத்தில் கலக்கும் பொழுதிலிருந்து மேலும் அதிகரிக்கிறது. எப்பொழுதுமே இப்பிடி இல்லை. பொதுவாக இப்படித்தான். இந்த முரண்நகைக்கு காரணம் யார் தெரியுமா?

ஒக்சிடோசின். யெஸ்! அவரே தான்.

நீண்ட கால உறவு என்பதற்கு மிகமிக அவசியமான இரசாயனம் இது. மூளையின் பரிவகக்கீழினால் சுரக்கப்படுவது. குழந்தை பேறு காலத்தில் தாய்ப்பாலை சுரக்க வைப்பது இது தான். தாய் சேய் பாசப்பிணைப்பை உருவாக்குவதும் இது தான். காதலன் காதலியை பிரிந்து வாடும் போது  ஃபீலிங்சை அதிகரித்து  காதலை தகிக்க செய்வதும் இது தான்.



//மேனி கொதிக்கு தடி!-தலை சுற்றியே
வேதனை செய்கு தடீ!
வானி லிடத்தை யெல்லாம்-இந்த
வெண்ணிலா வந்து தழுவுது பார்!
மோனத் திருக்குதடீ! இந்த வையகம்
மூழ்கித் துயிலினிலே,
நானொருவன் மட்டிலும்-பிரி வென்பதோர்
நரகத் துழலுவதோ?//

உடலுறவின் போது உச்சகட்ட இன்பத்தை வழங்குவதும் இதே ஒக்சிக்டோசின் தான். காதலில் ஏதோ ஒரு பக்கத்தில் இந்த ஒக்டோசின் குறைவடையும் போதுதான் தேனாக இனித்த காதல் பாவற்காயாகிறது.

இந்த ஒக்டோசின் தீராத காதல் சாகும் வரை நூராத தீபமாக ஒளிர, காதல் எப்படியிருக்க வேண்டும் என்று பாரதி பாடுகிறான்.

//வீசு கமழ் நீ யெனக்கு,விரியுமலர் நானுனக்கு;
பேசுபொருள் நீ யெனக்கு,பேணுமொழி நானுனக்கு//

பொதுவாக, காதல் மயக்கத்தில் அதிகம் உருண்டு பிறழ்வது காதலன் தான். பெண்கள் தங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்தவும் வெளிப்படுத்தலில் அழுத்தமும் மிக்கவர்களாக இருப்பார்கள். ஆண்களோ மாம்பழத்து அணிலே! பலாச்சுளை சுவையே! என்று காதலி பால் உருகி வடிவார்கள். அங்கே காமத்தின் அளவு கொஞ்சம் அதிகமாக இருப்பதே காரணம். அவள் நினைவுகளோடு அவளது அழகான உடலையும் சேர்த்து கற்பனை பொத்தானை தட்டிவிட ஃபீலிங்ஸ் மடைதிறந்து பாயும்.

//வீணையடி நீ யெனக்கு,மேவும் விரல் நானுனக்கு;
பூணும் வடம் நீ யெனக்கு, புது வயிரம் நானுனக்கு;
காணுமிடந்தோறு நின்றன் கண்ணி னொளி வீசுதடீ
மாணுடைய பேரரசே! வாழ்வு நிலையே!கண்ணம்மா!//

இவன் காமம் பெருக்கெடுத்து கொஞ்ச வரும் போதெல்லாம் அவள் நடைமுறை சிக்கல்களுக்குள் பேச்சை மாற்றுகிறாள். ஊர் , சடங்கு, சாதி , சம்பிரதாயம் என்ற நடைமுறைச் சிக்கல்களை பேசுகிறாள். அதற்கும் காதலன் காதல் போதையிலேயே பதில் சொல்கிறான்,

//சாத்திரம் பேசுகிறாய் கண்ணம்மா சாத்திரம் ஏதுக்கடீ
ஆத்திரம் கொண்டவர்க்கே கண்ணம்மா சாத்திரமுண்டோடீ
மூத்தவர் சம்மதியில் வதுவை முறைகள் பின்பு செய்வோம்
காத்திருப்பேனோடீ இது பார் கன்னத்து முத்தமொன்று //

காதலில் நாம் உறுதியாக இருக்கும் போது சடங்கு சம்பிரதாயங்கள் எல்லாம் எதுக்கு? தடைகள் வந்தால் உடைத்து வெல்லலாம். பெரியவர் சம்மதத்துடன் பின்னர் திருமணம் செய்வோம். அதற்கு காலம் இருக்கிறது. இப்பொழுது உன்பால் உருகி நிற்கும் என்





முத்தத்தை பெற்றுக்கொள்ளேனடி!

//வாயினிலே அமு தூறுதே - கண்ணம்மா என்ற பேர்சொல்லும் போழ்திலே - உயிர்த் தீயினிலே வளர் சோதியே - என்றன் சிந்தனையே, என்றன் சித்தமே! //

இவன் காதல் புலம்பலை கண்டு அவள் காதல் கொண்டவளில்லை,

//தேடிச்சோறு நிதந் தின்று - பல
சின்னஞ் சிறு கதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக வுழன்று - பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து - நரை
கூடி கிழப்பருவமெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையென பின்மாயும் - பல

வேடிக்கை மனிதரை போலே - நான்
வீழ்வே னென்று நினைத் தாயோ//



என்ற அவன் வாழ்க்கை மீதான நம்பிக்கையையும் பேராண்மையையும் கண்டு அவனை கரம்பிடிக்க துணிந்தவள். அதனால் அவன் கொஞ்சலில் கூட போலியான கலப்பும் புளுகு மூட்டைகளும் இருக்காது என்பதையும் அறிந்தவள். ஆதலால், அவன் ஆசையாய் அணைக்கும் போது கண்ணம்மாவும் காதலில் மயங்கித்தான் போகிறாள்.

அது தான் காதல்.

## குறுக்கெழுத்துப்போட்டி — 04

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 பூ | ம் | 2 பு | கா | ர் | | 3 அ | 4 வா |
| ர | | த் | | | 5 கு | ரு | வி |
| ட் | | 6 தி | ரு | 7 ம | ண | ம் | |
| டா | | ம | | 8 க | ம் | பு | |
| 9 தி | 10 க | தி | | த் | | | 11 து |
| | ட | | 12 மா | து | | 13 ப | லா |
| 14 அ | த் | தி | யா | வ | 15 சி | ய | ம் |
| 16 து | தி | | 17 வி | ம் | ப | ம் | |

### பரிசுக்குரியவர்

V. G. மோனிகா
07ம் வகுப்பு,
குளுத்தளை,
கரூர்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | | 5 | |
| 7 | | | | | 8 | | |
| 9 | | | | 10 | | 11 | |
| 12 | | | | | | | |
| | | | 13 | | 14 | | |
| | 15 | 16 | | | 17 | | |
| 18 | | | | 19 | | | |
| 20 | | | | 21 | | | |




## இடமிருந்து வலம்

*1- அரசியலில் ஒரு முக்கிய பதவி*
*5- நெசவு செய்ய பயன்படும் கருவி (திரும்பி)*
*7- தங்கத்தினால் ஆபரணங்கள் செய்கின்ற போது ஏற்படுகின்ற மூலப்பொருட்கழிவுகளை இப்படிக்கூறுவர். (குழம்பி)*
*9- ஒரு செயலை செய்து முடிக்க உறுதியாய் நிற்றலை இது கட்டுதல் என்ற மரபுத்தொடர் மூலம் அழைப்பர். ( குழம்பி)*
*11- அரசனின் துணைவி*
*12- அக்கறை என்றும் சொல்லலாம் (குழம்பி)*
*13- மனதிற்கு மகிழ்ச்சியை தரக்கூடிய அழகு*
*15- முழு நிலவு ( திரும்பி)*
*17- திருமணமான ஆண்களின் அடைமொழி (திரும்பி)*
*18- இலங்கையின் ஒரு மாவட்டம் (திரும்பி)*
*19- நான் என்ற செருக்கினைக் குறிக்கும்.*
*20- சினம் என்றும் சொல்லலாம்.*
*21- ஒருவகைப் பூச்சி*

## மேலிருந்து கீழ்

*1- கலைகள் நிகழும் மேடை*
*2- விளையாடும் இடம்(குழம்பி)*
*3- அரச அலுவல்கள் நடைபெறும் இடத்தையும் இப்படி அழைப்பர். (குழம்பி)*
*4- பரிபூரணம் என்றும் சொல்லலாம். (குழம்பி)*
*6- உலகத்தினை குறிக்கும் சொல்.*
*8- பசுவினைக்குறிக்கும் ஓரெழுத்து*
*10- ஒரு நோய்*
*11- நாட்டின் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பை இப்படி அழைப்பர். (குழம்பி)*
*14- விலங்கு என்றும் சொல்லலாம்.*
*15- கோழிகள் வளர்க்கப்படும் இடம்.(தலைகீழ்)*
*16- வகை என்றும் சொல்லலாம்.*
*18- கூடி வாழ்ந்தால் இத்தனை நன்மை என்கிறது பழமொழி. (திரும்பி)*
*19- அஃறிணை ஒருமையை சுட்டும் சொல்*

**அனுப்ப வேண்டிய.......**
மின்னஞ்சல் முகவரி :~ thumi2016@gmail.com
இறுதித்திகதி :~ 13.09.2020

# வலம்புரிச் சங்கு

வலம்புரிச் சங்கு (*Dakshinavarti Shankh*)) என்பது சங்குகளில் ஒரு அரிய வகை ஆகும். இது இந்து நம்பிக்கைகளில் மிகப் புனிதமான சங்காகவும், வளத்தையும், நலத்தையும் தருவதாக கருதப்படுகிறது. இந்த நம்பிக்கைகளின் காரணமாக வலம்புரிச் சங்குகளைப் பெருந்தொகை அளித்து வாங்குபவர் உள்ளனர். இச்சங்கு திருவிதாங்கூர் கொடி, கேரள அரசு சின்னம், சிக்கிம் அரசு சின்னம் போன்றவற்றில் இடம்பெற்றுள்ளது.

## நம்பிக்கைகள்

வலம்புரிச் சங்குகள் கடற்கரைக்கு வந்து முத்துகளைக் கொட்டிவிட்டுச் செல்லும் என்றும்,வலம்புரிச் சங்கு தானே முழங்கும் என்றும் நம்பிக்கை நிலவிவந்தது. வலம்புரிச் சங்கிலிருந்து விலையுயர்ந்த முத்து கிடைக்கும் என்ற நம்பிக்கை சங்க காலத்திலிருந்தே உள்ளது. சிலப்பதிகாரத்தில் வலம்புரியீன்ற நலம்புரி முத்தம் (27-244), மாசறு பொன்னே வலம்புரி முத்தே ( 2:73), வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும், வலம்புரியொரு முத்தன்ன (பெருந்தொகை 1712:25-27) வலம்புரி முத்து என்னும் கருதுகோள் பழந்தமிழ் இலக்கியங்கள் பலவற்றில் இடம்பெற்றுள்ளன.



## தோன்றும் விதம்

இடம்புரி, வலம்புரிச் சங்குகளானது வெண் சங்கு என்னும் ஒரே இனத்தைச் சார்ந்தவை. சங்குகள் கருமுட்டையாக வளரத் தொடங்கும்போது செல் பிளவுறும் கோணம் நேர் குறுக்காக அமையாமல் சற்று சாய்வாக அமைகிறது. அடுத்த பிளவுகள் முந்தைய பிளவின் சாய்கோணத்தில் அமைவதால் பிளவு நிலைகள் ஆரச்சுற்றில் நிகழ்கின்றன. புரிச்சுற்றின் அடிப்படையில் இதன் உடல் அமைவதால் அதை அடியொற்றி மேல்தோடும் அமைந்துவிடுகிறது. கருசெல் பிளவின் சாய்கோணம் இடது, வலது என விலகுவதற்கு இதன் மரபணுக்களே காரணம். இடம்புரி செல்பிளவு இயல்பானது. மரபணுவின் சடுதிமாற்றம் காரணமாகவே வலம்புரிச் சங்கு உருவாகிறது. மரபணு சடுதிமாற்றம் வெகு அரிதாக நிகழ்வது என்பதால் வலம்புரிச் சங்கும் அரிதாகவே கிடைக்கிறது.

## வகைகள்


வலம்புரி சங்கு உயர்வானது என்றாலும் அதைவிட உயர்வான சங்கு சலஞ்சலம்; சலஞ்சலத்திலும் உயர்வான சங்கு பாஞ்சசன்யம் என்று மக்கள் கருதினர். ஆயிரம் இடம்புரிச் சங்குக்கு இணையானது ஒரு வலம்புரி; ஆயிரம் வலம்புரிக்கு ஒரு சலஞ்சலம்; ஆயிரம் சலஞ்சலத்துக்கு நேரானது ஒரு பாஞ்சசன்யம் என்ற கருத்துக்கள் நிகண்டுகளில் கூறப்பட்டுள்ளன. சலஞ்சலத்தின் உள்ளே வெள்ளி நிறத்தில் இருக்கும் மூன்று கோடுகள் மும்மூர்த்திகளைக் குறிக்கும் என்று சில சம்ஸ்கிருத நூல்கள் சொல்கின்றன. என்றாலும் இன்றுவரை சலஞ்சலம், பாஞ்சசன்யம் என்பதாக விவரிக்கப்படும் சங்குகளை எவரும் கண்டதில்லை.

வலம்புரிச் சங்குகள் மேலான சக்தியைக் கொண்டவை என்பதற்கு சான்று எதுவுமில்லை வலம்புரிச் சங்குகள் இடம்புரிச் சங்கு போலன்றி மிக அரிதாகக் கிடைப்பவை என்பது மட்டும் உண்மை.

நா.வினோத்

# புற்றுநோய்

செல்களின் கூட்டமைப்பில் உருவானதே மனித உடல். நவரசங்களையும் எண் சுவைகளையும், ஆய கலைகளையும் அனுமதிப்பது செல்கள். இந்தக் கூட்டமைப்பில் சிக்கல் இல்லாதவரைதான் ஊரை அடித்து உலையில் போடுவதும், ஏறி மிதித்து முன்னேறிச் செல்வதெல்லாம் நிகழும். உடலில் உருவாகும் செல்களுக்கு பிறப்பு, இறப்பு என வளர்ச்சியின் காலகட்டங்கள் இருக்கின்றன. அது தவறும்போது நோய் ஏற்படுகிறது. அதிலும் பல ஆண்டுகளாக மனித உயிர்களை காவு வாங்கிக் கொண்டிருக்கிறது புற்றுநோய் *(Cancer)*. புற்றுநோய் என்பது தொற்றுநோய் அல்ல. ஆரம்பக்கால நோயை முற்றிலுமாக குணப்படுத்தலாம் என்கின்றனர் புற்றுநோய் சிகிச்சை மருத்துவர்கள். ஆனால் பிரச்சனை என்ன என்றால் பெரும்பாலும் புற்று நோய்களிற்கான நோய் அறிகுறிகள் தாமதமாகவே வெளித்தெருவதால் இறப்பு அதிகமாக இருக்கிறது. மாறிவரும் ரசாயன உலகில் புதிது புதிதாக நோய்கள் வரத்தான் செய்கின்றன. அதேநேரத்தில் அதைப் பற்றிய விழிப்புணர்வும், அடிப்படைத் தெளிவும், தற்காப்பு அக்கறையும் இல்லாமல் அதிலிருந்து தப்பிக்க முடியாது. குறைந்தபட்சம் கேன்சர் எனப்படும் புற்றுநோய் என்றால் என்ன? என்பதையாவது நாம் தெரிந்து கொள்ள வேண்டியது காலத்தின் தேவை.



ஆரோக்கியமான செல், உடல் இயக்கத்துக்கான செம்மையான பணியை முடித்து, பின் இறந்து, அடுத்த செல் வளர வேண்டும். இதுதான் செல்களின் இயல்பான வேலை. அப்படி அல்லாமல், புதிது புதிதாக அதீத வளர்ச்சியில் கட்டுப்பாடற்று செல்கள் உருவாகி பிறகு கட்டிகளாகும். இப்படியாக கட்டுப்பாடில்லாமல் பிரிந்து பிரிந்து வளர்ச்சியடையும் செல்கள் திசுக்கட்டிகளாக ( *Lumbs or Masses)* மாறுகின்றன. ஒன்று தீமை விளைவிக்காத கட்டி *(Benign Tumor)* மற்றொன்று புற்றாக மாறக்கூடிய கட்டி *(Malignant tumor)* உடலில் தோன்றும் எல்லாக் கட்டிகளையும் புற்றுநோயாக கருத்தில் கொள்ள வேண்டியதில்லை. ஆனால், பினைன் கட்டிகள், மெலிங்னென்ட்டாக மாற வாய்ப்பிருக்கிறது.

புற்றுநோய்கள் நூற்றுக்கணக்கில் இருக்கின்றன. உடல் உறுப்புகளில் எந்தெந்த இடங்களில் இவை தோன்றுகிறதோ அதற்குத் தகுந்தாற்போல வகைப்படுத்தப்பட்டுள்ளன. கேன்சர் செல்களானது,, ரத்தஓட்டம் மற்றும் நரம்பு மண்டலங்களில் தீமை செய்யும் ஹார்மோன்களை விடுவித்து உடல் இயக்கத்தில் மாற்றம் செய்துவிடும்.
புற்றுநோய் செல்கள் இரண்டு வகையில் தனக்கான இடத்தை தக்கவைக்கின்றன. முதலில் இந்த செல்கள் தங்களை பெருக்கிக் கொண்டு ஆக்டோபஸ் போல தன் கொடிய கரங்களால் ரத்தம் மற்றும் நிணநீர் பாதைகளில் உள்ள ஆரோக்கியமான திசுக்களை அழித்துக்கொண்டே அதிவேகமாக உள்ளே பரவும். அதாவது அருகில் இருக்கின்ற பகுதிகளை துளைத்துக்கொண்டு நகர்ந்து குருதி மற்றும் நிண்னீர் கால்வாய்கள் , அருகில் இருக்கின்ற வேறு அங்கங்களிற்கு பரவும். இதற்கு ஆங்கிலத்தில் இன்வேசன் *(Invasion)* என்று பெயர். அடுத்ததாக, இந்த அரக்க செல்கள் பலமடங்கு பிரிந்து, வளர்ந்து தனக்கென

மருத்துவம் போற்றுதும்

சுகமாரன் சுஜன்.
4ம் வருடம்,
கொழும்பு மருத்துவ பீடம்.

புதிய ரத்தநாளங்களை உருவாக்கிக் கொண்டு வளர்ச்சிக்கான சத்துகளைப் பெற்று சுயாட்சி நடத்தும். இதை ஆஞ்சியோஜெனிசிஸ் *(Angiogenesis)* என்கிறார்கள். இந்த நிலைக்கு தன்னை நிலைப்படுத்திக்கொண்ட தீய செல்கள் ஒருகட்டத்தில் எந்த மருந்து மாத்திரைகளுக்கும் அடங்காமல் பசைபோல் ஒட்டிக்கொள்ளும். கண்ணாமூச்சி ஆட்டம் போல் அங்கும் இங்குமாக ஓடிக்கொண்டிருக்கும். அதேநேரம் அதற்குச் சாதகமாக, நன்மை தரக்கூடிய செல்களை அழிக்கும்.

நினைவாற்றலில் குழப்பம் ஏற்பட்டு ஐயோ... என பதைபதைத்து எம்ஆர்ஐ (MRI) ஸ்கேன் எடுக்கப்பட்டதன் முடிவில் மூளையில் புற்றுக் கட்டி இருப்பது தெரியவரலாம். அதன்பிறகு `கேன்சரா' என மரண பயத்தில் சிகிச்சை எடுக்க முடிவு எடுப்பீர்கள். `எனக்கு அப்பப்போ இருமும்போது ரத்தம் வருது...' என்று சோதனை செய்தால் நுரையீரலில் புற்று இருப்பது தெரியவரும். இதைப் பரிசோதனையின்போது கண்டுபிடிப்பார்கள். முதலில் நுரையீரலில் இருந்த செல்கள் ஓடிப்போய் மூளையையும் பாதித்துவிட்டது என்பது தெரியவரும். இதைத்தான் `செகண்டரிஸ்' என்பார்கள். இந்த நிலைக்கு மெட்டாஸ்டாசிஸ் *(Metastasis)* என்று பெயர். இந்தநிலையில் கேன்சர் செல்களை அழிப்பது என்பது கடினமான வேலை என்கிறது மருத்துவம்.

உலக அளவில் புற்றுநோய் மனித இறப்புக்கான இரண்டாவது இடத்தில் இருப்பதாக அமெரிக்கப் புற்றுநோய் கழகம் *(American cancer Sociiety)* தெரிவிக்கிறது. அதிலே 70% ஆன இறப்புக்கள் பொருளாதார வள்ர்ச்சி குறைந்த நாடுகளிலே ஏற்படுகிறது.

### புற்று நோய்களிற்கு பொதுவான காரணங்கள் என்ன? .

பொதுவாக என்னதான் காரணம் என்று பல்வேறு ஆய்வுகளை உற்றுநோக்கினால் இதுதான் என உறுதியாகச் சொல்ல முடியவில்லை. ஆனால், ஒருசிலவற்றை கண்டுபிடித்திருக்கிறார்கள். முதலாவதாகப் பரம்பரை. அதாவது மரபு வழி. *(Genes – The*



*DNA type)* உங்கள் குடும்பத்தில் தாய், தந்தை வழி இந்த நோய் இருந்தால் நிச்சயம் அலட்சியப்படுத்தாமல் சோதனை செய்துகொள்வது மிக அவசியம். புகையிலை, கூரையாக வேயப்படும் ஆஸ்பெஸ்டாஸ், ஆர்சனிக் உலோகம், கதிர்வீச்சு *(Gamma and X Rays)*, மித மிஞ்சிய சூரியக் கதிர் வீச்சு, வாகனங்களில் இருந்து வெளிப்படும் புகை போன்ற பல வேதியியல் காரணிகளாலும் *(carcinogens)* இந்நோய் பரவுகிறது.
உதாரணமாக, பெரிய எண்ணெய் சட்டிகளில் லிட்டர் கணக்கில் எண்ணெய் ஊற்றி, பாக்கெட் மசாலாக்களில் ஊறவைத்து சிவக்க, மணக்க பொரித்துத் தரப்படும் சிக்கனை ரசித்து சாப்பிடுகிறோமே, அது எந்த வகையான எண்ணெய் என்பதைவிட, புது எண்ணெயா என யோசிப்பதில்லை.
ஒருமுறை கொதிக்க வைத்ததை மீண்டும் கொதிக்க வைத்தால் ஏன் கேன்சர் வரும்? வேதியியல் மாற்றம்தான். அதிகப்படியான கொதிநிலையில் ஒவ்வாத மூலக்கூறுகள் *(Free oxygen Radicals)* உருவாகின்றன. அவை நம் உடலில் உள்ள நன்மைதரும் எலெக்ட்ரான்களை உட்கிரகித்து நோய் உருவாக்குகிறது. நாள்பட்ட பல்வேறு நோய்களுக்கு இதுவும் காரணம். இதன் வீரியத்தை குறைக்கும் சக்தி ஆன்டி-ஆக்ஸிடென்ட்டுக்கு உண்டு. அதற்குத்தான் சத்துள்ள இயற்கையான காய்கறிகளையும் பழவகைகளையும் உண்ணச் சொல்கிறார்கள். என்வே பழங்கள் , மரக்கறிகளை கூடுதலாக சேர்க்க வேண்டும்.

இதைவிட புற்று நோய்களுக்குரிய மிக முக்கிய காரணியாக வயது இருக்கிறது. எனவேதான் பெரும்பாலான புற்று நோய்கள் 50 வயதிற்கு பின்னர் ஏற்படுகிறது.

வைரஸ் தொற்று தாக்குதலினாலும் புற்றுநோய் உருவாகிறது என மருத்துவ ஆய்வுகள் முன்வைக்கின்றன. அதில் முக்கியமானது, *HPV (Human pappiloma virus)* (பெண்களுக்கான கருப்பைவாய் புற்று உருவாகிறது. இதை தடுப்பதற்கு பெண்பிள்ளைகளிற்கு பாடசாலையின் 11 வயதிலே ஒரு தடுப்பூசி வழங்கப்படும். அதை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும்) ஹெபடைட்டிஸ் பி மற்றும் சி *(Hepatitis),* ஈரல் புற்றுநோய்க்கு காரணமாகிறது. எப்ஸ்ட்டீயின் பார் வைரஸ் *(Epstein – Barr virus)* குழந்தைகளின் பல்வேறு புற்றுநோய்களுக்கு இந்த வைரஸ் காரணம்.

புற்று நோயில் அதிகம் மரணத்தை ஏற்படுத்தும் புற்று நோய்களாக, நுரையீரல், குடல் *(colorectal)*, இரப்பை *(stomach)* மார்பக புற்று நோய் என்பன அடங்குகின்றன். புகையிலை, புகைப்பிடித்தல், மது அருந்துதல், பான்பராக் போன்ற போதைப்பொருட்கள், வெற்றிலை பழக்கம் உள்ளவர்களுக்கு வாய்ப்புற்றுக்கான



வாய்ப்புகள் இருக்கின்றன. வெறும் வெற்றிலையில் மருத்துவக் குணங்கள் இருக்கலாம். ஆனால், புகையிலையுடன் உண்பவர்களுக்கு பாதிப்பு ஏற்படும். இந்தியாவில்தான் வாய்ப்புற்றுக்கான சதவிகிதம் அதிகம் இருப்பதாகச் சொல்கிறார்கள். மனக்கவலை என்று குபுகுபுவென சிகரெட் புகையை வீடு முழுக்க நிரப்புகிறீர்கள். உங்களைவிட, மடியில் அமர்ந்து நிக்கோடினை சுவாசிக்கும் குழந்தைகளுக்கு நுரையீரல் புற்று வரும் தெரியுமா உங்களுக்கு?

மார்பகப் புற்றுநோயினால் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றர். உலக அளவில் ஒரு லட்சம் மக்கள் தொகையில் 43 சதவிகிதம் பெண்களுக்கு மார்பக புற்று நோய் ஏற்படுகிறது..

பெரும்பாலும் இன்றைய வாழ்வியல் முறையில் ஏற்பட்ட மாற்றங்களைத்தான் பாதிக்கப்பட்டவர்கள் குறையாக முன்வைக்கிறார்கள். *Alcohol , tobacco* பாவனைகள். பொருத்தமற்ற இரசாயனம் கலந்த உணவுகள், அது கூடிய உடல் நிறை என்பன பெரும்பாலான காரணிகள் ஆகும்.

### புற்று நோய்களிற்காக வழங்கப்படும் சிகிச்சை முறைகள்?

பொதுவக புற்று நோய் கட்டிகள் எந்த நிலையில் இருக்கிறது என்பதை பொறுத்தே சிகிச்சை முறையும் தீர்மானிக்கப்படும். அதாவது புற்று நோய்கள் ஆரம்பத்திலே கண்டுபிடிக்கப்படும் சத்திர சிகிச்சை மூலம் கட்டிகள் பூரணமாக் நீக்கப்படுவதன் மூலம் சிறப்பாக குணப்படுத்த முடியும். ஆனால் தாமதமாக கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் சத்திரசிகிச்சை செய்வதன் மூலம் பயன் இருக்கிறதா என வைத்தியர்களால் முடிவெடுக்கப்படும். இதை விட மாத்திரைகள் *(chemotherapy* , கதிர் பிடித்தல் *(radiotherapy)* போன்றவையும் சிகிச்சை முறையில் அடங்கும்.

இந்த சிகிச்சை முறை வழங்கப்படும் கால அழவிற்கு மிக தாமதமாக புற்று நோய் கட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டால், வேறு தீர்வுகள் இல்லை எனும் பட்சத்தில், நோயாளியின் உடைய, புற்று நோய் கட்டிகளாக் ஏற்படும் நோய், நோ வலிகள் அறிகுறிகள் மாத்திரம் குறைக்கப்படும். இதை *palliative care* என்று சொல்வார்கள்.

எனவே இந்தக்கட்டுரை மூலமாக புற்றுநோய்களிற்கான மேலோட்டமான அறிமுகத்தையே பார்த்து இருக்கிறோம். ஒவ்வொரு புற்றுநோய்கள் சம்பந்தமாகவும், அவற்றின் நோய் அறிகுறிகள் சம்பந்தமாகவும் எதிர்காலத்தில் விரிவாய் பார்ப்போம்.

# பாரதி என் காதலன்!



தாம் கண்ட புதுமைப்பெண்
யான் ஆக வேண்டும்!

சாதி, மதம் களைந்து
கீழோர், மேலோர் எவரும் இல்லை
யாவரும் ஒன்றே என வாழ்ந்திட வேண்டும்!

தீயதை கண்டால் எதிர்த்து போரிட
மனதில் உறுதி வேண்டும்!

வீரத்தமிழனாய் அச்சமில்லை என்று
போராட வேண்டும்!

நின்கவியின் சுவையை புசித்து
ஆசை முகம் மறந்து போக வேண்டும்!

தமது வழி செல்லும் என் விழி
சுட்டும் விழிச்சுடராய் ஒளிர வேண்டும்!

யாவர் மனதிலும் சின்னஞ்சிறு கிளியாய்
சுற்றித்திரிய வேண்டும்!

தங்கள் புகழ்பாட நல்லதோர் வீணை செய்து
அதை ஞாலம் முழுவதும் பரிமளிக்க செய்ய
வேண்டும்!

இறுதியில், தாமே கதியென சரணடைய
வேண்டும்!

✒ சக்தி




(சென்ற இதழின் தொடர்ச்சி...)

பொழுது புலர்ந்தது. என்னைத்திறந்து உள்ளே போனால் அரங்கரை காணவில்லை. ஸ்தம்பித்து விட்டது ஸ்ரீரங்கம். கல்லைக் கடவுளென்று நீராட்டி, நைவேத்தியம் இட்டு வழிபடுகின்றோம். ஆனால் அந்த கல் நைவேத்தியம் உண்பதையோ, நகர்ந்து திரிவதையோ ஏற்றுக்கொள்ள மாட்டோம். கல் கல்லாயே இருப்பதை எதிர்பார்த்துக்கொண்டு கடவுளாகவும் இருக்க எதிர்பார்க்கின்றோம். கேட்டால் பக்தி என்கிறோம். "அரங்கன் எங்கோ சென்றிருக்கிறார். வந்துவிடுவார்." என்று எவரும் சொல்வாரில்லை. அரங்கனை யாரோ கடத்தி விட்டார்கள் என்று தான் சொல்லிக்கொண்டார்கள் ஒருவரைத்தவிர. ஆம்! அவரே தான். ராமானுஜர்! நடந்தவற்றை உணர்ந்து கொண்டவர் டில்லி நோக்கி பயணமானார்.

எதிர்பார்த்தவை நடந்துவிடக்கூடாதென்று எதிர்பார்த்து தீட்டிய திட்டத்திலும் எதிர்பாராத திருப்பம் நடந்ததால் ஏக்கத்துடன் இருந்தான் அலி. மார்க்கம் மாறி மாயவன் மீது தன் மகள் மயக்கம் கொண்டதை உறவுகள் அறிந்தால் பழிக்குமாம்; ஊர் அறிந்தால் சிரிக்குமாம்; சுல்தான் அறிந்தால் சுக்கு நூறாகிவிடுமாம் தலை. ஆனால், சிலைக்குள் சிக்குப்பட்டிருக்கும் மகளை ஒரு அளவுக்கு மேல் கட்டுப்படுத்தவும் பயப்பட்டான். பிடிவாதம் பலமான ஆயுதம். யாரும் கையிலெடுக்கலாம். ஆனால் முதலில் எடுத்தவருக்கே அது வெற்றியை பெற்றுத்தரும். முதலில் எடுத்தவள் மூன்சென்.

அரங்கனின் சிலையோடு ஐக்கியப்பட்டிருந்தாள் அவள். மந்திரங்கள் இல்லாமல், கிரியா முறைகள் இல்லாமல் தனக்கு பிடித்த ஒழுங்கில் அவள் வணங்கினாள்; இல்லை இல்லை அரங்கனை அவள் வளர்த்தாள். அந்த வளர்ப்பில் தாயின் பக்குவமும், தாரத்தின் பாசமும் இருந்தது.

மூன்சென் என்கிற முஸ்லீம் பெண்ணிற்குள் தமிழ்க் கலாச்சாரம் மெல்ல மெல்ல ஊடுருவத்தொடங்கியது. தன் அறையையே அரங்கருக்குரிய ஆலயம் ஆக்கினாள். ஸ்ரீரங்கத்தில் சென்றிருந்த போது வழிபாட்டு முறைகளை ஒரு தடவையே பார்த்திருந்தாலும், மனதால் பார்த்திருந்தாள். தனக்காக ஊர் விட்டு ஊர் வந்துள்ள அரங்கர் மனம் மகிழ வேண்டுமென விரும்பினாள். ஸ்ரீ ரங்கத்தில் தான் கண்டவற்றுக்கு டில்லியில் செயல்வடிவம் கொடுத்தாள். கிடைத்த மாவில் புள்ளிகள் வைத்து கோலமிட்டாள். பன்னீரிலே விக்கிரகத்தை குளிப்பாட்டினாள். மதங்களே சங்கமித்த இடத்தில் சாதிக்கென்ன வேலை? பல சாதி மலர்களிலே சரம் தொடுத்தாள். அவளுக்கு பசித்தது. அரங்கருக்கும் அல்லவா பசித்திருக்கும்.



தென்னிந்திய உணவுகளை சமைக்கத்தெரியாதே அவளுக்கு? முகமதிய உணவுகளை அரங்கருக்கு புசிக்கத் தெரிந்தாலும் சரி தானே என எண்ணியவள் விதம் விதமாக தானே சமைத்தாள். பொங்கலை ஏற்றவர் போளியையும் ஏற்றார்.

அரங்கரை மீட்க வந்த ராமானுஜருக்கு இரண்டு அதிர்ச்சிகள் காத்திருந்தன. மத நல்லிணக்க சமிக்ஞை காட்டி சிலையை கையளிக்க தயாராகியிருந்த தந்தை அலி ஒரு அதிர்ச்சி! மதங்களை எல்லாம் கடந்து அந்த சிலையை காதலித்துக் கசிந்துருகி கொண்டிருந்த மகள் மூன்சென் இரண்டாம் அதிர்ச்சி. அலியின் நல்லிணக்க சமிக்ஞையின் பின்புலம் ராமானுஜருக்கு தெரிந்திருந்தாலும் அவருக்கும் வேறு வழியில்லை. அரங்கனை இருப்பிடத்தில் சேர்ப்பிப்பதையே ராமானுஜர் தலையாய கடமையாக ஏற்றார். பார்த்ததால் வந்த மூன்சென்னின் மூர்க்கத்தனமான அன்பு சில நாள் பார்க்காமல் இருந்தால் போய் விடுமென எண்ணினார். மூன்சென் இரவு பகலாக அரங்கனுடனேயே இருந்தாள். அவள் நீராடச்சென்ற நேரம் பார்த்து அலியின் உதவியுடன் அரங்கனை அரண்மனையில் இருந்து ராமானுஜர் பெயர்த்து வந்தார்.



கதிரவன் அற்ற வானகமாய் இருந்த ஸ்ரீரங்கம் விழாக்கோலம் கொண்டது. மாவிலை தோரணங்களோடு மக்கள் வெள்ளமும் ரங்கநாதனையும், ராமானுஜரையும் வரவேற்றன. ஓரிடத்தில் இரவு, இன்னோரிடத்தில் பகல். மூன்சென் சந்தோசப்பட்ட போது ஸ்ரீரங்க வாசிகள் கவலைப்பட்டார்கள். இப்போது ஸ்ரீரங்க வாசிகள் சந்தோசப்படுகிறார்கள். மூன்சென்? அரங்கரை வரவேற்க கூடியிருந்த கூட்டத்தில் அரசல்புரசலாக இழையோடிய கதை ஒன்று ராமானுஜர் செவிகளுக்கும் எட்டியது. அதிர்ச்சியில் உறைந்து விட்டார் ராமானுஜர். அவரால் நம்ப முடியவில்லை. முற்றும் துறந்தவருக்கும் கண்கள் குளமாகியது. வைணவர்களின் பக்தியை எல்லாம் தாண்டிவிட்டது அவளது பக்தி. நீராடி விட்டு வந்தவள் அரங்கநாதனை காணாமல் நிர்மூலமாகிவிட்டாளாம். உயிரால் அழுதிருக்கிறாள். தேற்றியவர்களில் சிலர் அரங்கனை காண வைகுண்டம் தான் செல்ல வேண்டுமென்றிருக்கிறார்கள். வைணவர்கள் இறந்தால் வைகுண்டம் செல்வார்களாம். இஸ்லாமியப்பெண் தான். இருந்தால் என்ன? ஸ்ரீரங்கத்து கதவுகளைத் திறக்க வைத்தவளால் வைகுண்ட கதவுகளை திறந்து விட முடியாதா என இறந்திருக்கிறாள். ஆம்! மூன்சென் உயிர்த்தியாகம் செய்துவிட்டாள்.

ரணகளமாகியிருந்த ராமானுஜர் உள்ளம் பலவாறாக சிந்தித்தது. "அரங்கரை அவள் கடத்தினாலென்றால் நானும் கடத்தித்தான் வந்திருக்கிறேன். நான் கடத்தல்காரன் மட்டுமல்ல கொலைகாரனும் தான். போன அரங்கருக்கு வரத்தெரியாதா? அவரை மீட்டுவர நான் யார்? மீட்பரையே மீட்கும் மீட்பனாகத் துணிந்து மாபாதகம் அல்லவா புரிந்து விட்டேன். மாசற்ற அன்பை உதாசீனம் செய்தேனே! நாளும் வணங்கும் அரங்கனை காணாத நாம் உணவைத் துறந்தோம்; உறக்கம் துறந்தோம். ஆனால் அவள் உயிரையல்லவா துறந்திருக்கிறாள். ராதா, மீரா வழியில் அவள் அன்பு போற்றுதலுக்குரியது. ஸ்ரீரங்கம் கண்ட இன்னொரு ஆண்டாள் அவள்! அவளும் ஆண்டாள் போல் பூசிக்கப்பட வேண்டியவள். " கண்ணீரில் வார்த்தைகள் நனைய நனைய ராமானுஜர் கூறியதை பலர் ஏற்றாரில்லை. மதத்திற்குள்ளேயே சண்டை பிடித்துக்கொண்டிருந்த காலத்தில் இன்னொரு மதத்தவள் பூசிக்கப்படுவதை மதவாதிகள் மறுதலித்தனர். ஆனால் ஆண்டாளின் பக்தியை மதித்த ஸ்ரீரங்கம் மூன்சென் பக்தியையும் மதிக்க

வேண்டுமென்பதில் உறுதியாய் இருந்தார் ராமானுஜர். பல எதிர்ப்புக்களைத்தாண்டி அதை நிஜப்படுத்தினார்.

மூன்சென்னிற்கு ஸ்ரீரங்கத்து ஆலயத்திற்குள் தனிச்சந்நிதி அமைக்கப்பட்டது. மூன்சென் துலுக்க நாச்சியாரானார். வைணவர்களாலும், வரும் சகலராலும் இன்றும் கூட வழிபடப்படுகின்றார் துலுக்க நாச்சியார். காதலால் என்ன இயலுமென்று கேட்பவர்களே! இந்து இஸ்லாமிய சண்டை நடந்து கொண்டிருக்கும் இந்த காலத்தில் கூட ஒரு இஸ்லாமிய பெண் இந்துக்கடவுளாக இந்து ஆலயத்திற்குள் வைத்து பூசிக்கப்படுகிறாள். இப்படி ஒரு அதிசயத்தை காதலைத்தவிர எந்த சக்தியால் சாதிக்க முடியும்? பிரிவினைகளால் பிளவுபட்டுப்போன உலகத்தை ஒட்ட வைக்க அன்பு ஒன்றுதான் ஆயுதம் என்பதை மூன்சென் கதையும் நிறுவி நிக்கிறது.

கதவாய் இருந்ததாலோ என்னவோ எனக்கு அந்தப்பக்கமும் சரி இந்தப்பக்கமும் சரி நடந்த பலவற்றை பார்த்தும் கேட்டும் வந்திருக்கிறேன். அயோத்தியில் இஸ்லாமியரோடு முரண்பட்டு இராமருக்கு கோயில் கட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். இங்கே பாருங்கள். இஸ்லாமியப்பெண்ணை இந்துக்கோயிலுக்குள் வைத்து வழிபடுகிறார்கள். அன்பு தான் அடிப்படை. அரங்கன் மீது மூன்சென் கொண்ட அன்புக்கான மரியாதையே ஆலயத்திற்குள் அவள் வணக்கத்துக்குரியவளானமை. ஆனால் அந்த அன்புக்கான மரியாதை அவள் இருக்கும் போதே கிடைத்திருந்தால் அவள் உயிர்த்தியாகம் செய்திருக்க மாட்டாள். அன்பை நிரூபிப்பதற்கு உயிர்த்தியாகமா வழி? மனிதர்களை விட மதங்கள் முக்கியமில்லை என்று தான் மதங்களே சொல்கின்றன. அன்பானவர்களே, அன்பு செய்யுங்கள்; அன்பை மதியுங்கள். அன்பினால் இணையுங்கள். அன்போடு வாருங்கள். தட்டத்தேவையில்லை. தானாகத்திறப்பேன்!!!



**இப்படிக்கு,**
**ஆலயக்கதவு** (ஸ்ரீரங்கம்)

# அட்டைப்படம் பற்றி...



**ஓவியம் :~ நயனி**
**பக்க வடிவமைப்பு :~ ரிஷி**

எழுத்தையே ஆயுதமாக்கியவர் ஏன் ஆயுதத்தை கையில் ஏந்தினார்?

பாரதி சிலையை பாரதியே உடைப்பது ஏன்?

பாரதீயின் எழுத்துக்களுக்கு தீ வைத்தவர் யார்?

நெருப்பாய் எரித்த எழுத்துக்கள் நெருப்பில் எரிவது ஏன்?

வினாக்களோடு இருங்கள்...
விடைகளோடு அடுத்த இதழில் சந்திக்கிறேன்...

**இப்படிக்கு,**
**கப்பச்சினோ**

# முயற்சி தன் மெய் வருத்த கூலி தரும்

அடுக்குமாடிகளாக பெருமளவு நிலத்தை விழுங்கி நிற்கும் தொழிற்சாலைகளில் வினைத்திறன் மிக்க தொழில்நுட்பங்களின் உதவியுடன் பல்தரப்பட்ட உற்பத்திகளை மேற்கொண்டுவருகின்ற இன்றைய நவீன யுகத்தில், பெரிய பெரிய தொழிற்சாலைகளின் துணையுடன் தயார் செய்யப்பட்டு வருகின்ற உற்பத்திகளை மிகவும் சாதாரணமான தொழில் பட்டறையொன்றினை அமைத்து தம் சுய முயற்சியால் பரம்பரை பரம்பரையாக செய்து வரப்பட்ட தொழிலில் சாதனைப்படைத்து வரும் சிறப்புவாய்ந்த மனிதரை நேர்காணல் ஊடாக சந்திக்க நேரிட்டது.

“குடி குடியை கெடுக்கும்" என்பார்கள் குடி வீட்டுக்கும் நாட்டுக்கும் கேடு விளைவிக்கும். குடி உடல்நலத்திற்கு உகந்ததல்ல. என்று எவ்வளவுதான் கூவி நின்றாலும் மதுப் பிரியர்களின் எண்ணிக்கையும் பாவனையும் குறைந்தப்பாடில்லை. அந்த வகையில் மதுபான வகைகளில் ஒன்றான பீர் மதுபான பாவனையின் அதிகரிப்பால் வெற்று மதுபான தகரப்பேணிகளின் கழிவுகள் சூழலை நிரப்பிவருகிறது. இத்தகையதோர் அசாதாரண சூழ்நிலையை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு தமது வாழ்க்கைக்கான வருமானத்தை ஈட்டிக்கொண்டு வருகிறார் ஓர் தனிமனிதர் என்றால் நம்புவீர்களா? அவர் வீதிகளில் வீசியெறியப்படும் வெற்று மதுபான தகரப்பேணிகளை கொள்வனவு செய்து அவற்றை உருக்கி வீட்டுப்பாவனைப் பொருட்களாக உற்பத்தி செய்து வருகிறார்.



## அறிமுகம்



அந்த சிறப்புக்குரிய நபர் யாழ்ப்பாணம் அராலி வடக்கில் செட்டியார் மடம் சின்னவளவுப் பிரதேசத்தில் பீர்ப்பேணி அலுமினியத் தொழிற்பட்டறையை நடாத்திவரும் சின்னத்துரை சசிக்குமார் என்பவராவார். இவர் வெற்று மதுபானப்பேணிகளை கொள்வனவுசெய்து அவற்றை உருக்கி வீட்டுபாவனைக்குகந்த சமையல் உபகரணங்களை தயார்செய்து வருகிறார். இச்சுயத்தொழிலை அவரின் தந்தைகாலத்திலிருந்து வெற்றிகரமான முறையில் செய்துவருகின்றார்.

## உற்பத்தி செயன்முறைக்கு பயன்படுத்தப்படும் பொருட்கள்

இவ் அலுமினிய பாத்திரங்களின் உற்பத்திக்கு தெருவோரங்களில் வீசியெறியப்படுகின்ற பீர் டின்களையும் பாவனைக்குதவாத பழைய பொருட்களை சேகரித்து தொகையாக வழங்கிவரும் கடைகளிலும் கொள்வனவு செய்துக்கொள்கிறார். இப்பேணிகளை உருக்குவதற்கு தேவையான சீனச்சட்டி எனும் பதார்த்ததை கொழும்பிலிருந்து கொள்வனவு செய்து கொண்டு வந்து ஒயில் சேர்த்து உருக்கிக கொள்வார். அச்சில பதிக்க உதவும் மண்ணானது ஆற்று வாய்க்கால் மண் குறுமணல் களிமண் என மூன்றுவகையான மணல் சேர்த்து கலவையாக்கப்பட்டு பயன்படுத்துகிறார். எரியும் தீச்சூலைக்கு செயற்கை வாயுவினை வழங்குகிறார். இவற்றை தவிர உற்பத்தி பொருட்களை பாவனைக்கு ஏற்ற பொருளாக மாற்றுவதற்கு அதனை செம்மை செய்வதற்கான இயந்திரத்துக்கு மாத்திரம் மின்சாரம் பயன்படுத்தப்படுகின்றது. மற்றைய

பொருட்கள் எல்லாம் இயற்கை பொருட்களை கொண்டு கைகளால் தயார் செய்யப்படுகின்றது.

### உற்பத்தி செயன்முறை

கொள்வனவு செய்து வரப்பட்ட மதுபானத் தகரப்பேணிகளை தீச்சூழையிலிட்டு எரித்து உருக்கி அவற்றை மண் இட்டு தயார் செய்து வைக்கப்பட்டிருக்கும் மோல்ட் எனப்படும் அச்சுகளில் உருகிய அலுமிய திரவத்தை ஊற்றி வார்த்துத்துக் கொள்ளப்படுகிறது. பின் அச்சிலிருந்து உற்பத்தி பொருட்களை பிரித்து எடுக்கின்றனர். அவ்வாறு பிரித்தெடுக்கப்படும் உற்பத்தி பொருட்களின் தேவையற்ற பகுதிகளை வெட்டியகற்றி அவற்றை பாவனைக்கு ஏற்றவகையில் செம்மைபடுத்துகின்றனர்.

இங்கு குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில் உற்பத்தி பொருட்களுக்கு தேவையான மாதிரி அச்சில்களை தாமாகவே பல வடிவங்களில் தயாரித்துக் கொள்கின்றனர். உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் இங்கு யாழ்ப்பாணத்தில் பெயர்போன பாரம்பரிய உணவுகளில் ஒன்றான குண்டு தோசை தயார் செய்வதற்கான சமையல் பாத்திரங்களை பல்வேறுப்பட்ட வடிவமைப்புகளில் தயாரித்து வழங்குகின்றார். இவற்றோடு உரல், உரொட்டிதகரம்/தோசைக்கல் கேக் அச்சில் வகைகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு தேவையான அலுமினிய பாகங்கள் என்பவற்றையும் தயார்செய்து வருகிறார்.

### பாதுகாப்பு பொறிமுறைகள்

தீச்சூலையிலிருந்து வெளியாகும் வெப்பம் அதிகமாக இருப்பினும் வெட்ட வெளியில் இத்தொழிற்பட்டறை காணப்படுவதால் ஓரளவு வெப்பச்சமநிலையை பேணமுடிவதோடு நச்சுவாயுக்களை சுவாசிக்காமலிருக்க முகக்கவசம்(Mask) அணிகின்றனர். அத்தோடு உருகிய பின் எஞ்சியிருக்கின்ற மதுபான தகரப்பேணிகளின் கழிவுகளை மீளவும் கொழும்புக்கு ஏற்றுமதி செய்கின்றனர்.

### விற்பனையும் வருமானமும்

தாம் உற்பத்திசெய்துவருகின்ற அலுமினியப்பொருட்களை யாழ்ப்பாணத்தின் நகர்புற கடைகளுக்கு விற்பனைக்காக வழங்கிவருகிறார். குறைந்த விலையில் தரமானதாகவும் வெவ்வேறுப்பட்ட வடிவமைப்புகளிலும் கைக்கு அடக்கமான முறைகளிலும் இவரின் உற்பத்திப்பொருட்கள் காணப்படுவதால் வாடிக்கையாளர்களும் அற்றை அதிகமாக கொள்வனவு செய்துவருகின்றனர். தமது குடும்பத்தை கொண்டு நடாத்துவதற்கு போதியளவான வருமானத்தை இதனூடாக ஈட்டக்கொள்ள முடிவதுடன் தீச்சூழையில் வெந்து நொந்து உற்பத்தி செய்கின்ற எமது உற்பத்திகளை யாழ்ப்பாணமெங்கும் விநியோகம் செய்து மக்கள் குறைந்த விலையில் இத்தகைய அலுமினிய பாத்திரங்களை பெற்றுக்கொள்ள வழி செய்து வருகின்றோம் என்ற வகையில் மனத்திருப்தியடைகின்றார்.



### திறமைக்கு கிடைத்த பாராட்டுக்கள்

இவரின் இவ் சுயத்தொழில் முயற்சி NSB வங்கிக் கிளையின் துணையுடன் கண்காட்சிக்கு வைக்கப்பட்டது. மற்றும் சந்திரிக்கா அம்மையார் ஆட்சிகாலத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சிகளிலும் தமது உற்பத்திப்பொருட்களை காட்சிக்குவைத்துள்ளார்.

படிப்பறிவுள்ளவர்களே தொழில்வாய்ப்புகள் தேடி திண்டாடிகொண்டிருக்கும் இன்றையகாலத்தில் இத்தகைய சுயத்தொழில் முயற்சியானது வரவேற்கதக்கதுவும், சசிகுமார் போன்ற சுயத்தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்க வேண்டியதுவும் காலத்தின் தேவையாகவுள்ளது.

நவரத்னம் தில்காந்தி



அருந்ததி

2014 ஆம் ஆண்டு முதல் 800 இற்கு மேற்பட்ட திருமணங்களை வெற்றிகரமாக நடத்திய அருந்ததி இணைய திருமண சேவை.

3000 இற்கு மேற்பட்ட வரன்களில் இருந்து உங்களுக்கு பொருத்தமானவரை தெரிவு செய்யுங்கள்.

www.arunthathee.com

Arunthathee (Pvt) Ltd
+947 77 164 524

18, Ramakrishna Avenue, Colombo 06. | 20 K.K.S Road Kokuvil, Jaffna.

# கண்மணி

தேய்ந்த சைக்கிள் டயர் போல என் முகம். வயது ஐம்பது எனக்கு. உங்களுக்கு இதை தெரியப்படுத்த எவ்வித தேவையுமில்லை. எந்தன் வாழ்வில் குறிப்பிடும்படியாக எதையும் நான் இன்னும் கிழிக்க வில்லை என்பது நீங்கள் அறிய வேண்டிய ஒன்று. காலையில் பதினொரு மணியளவில் எழும்பி பல் துலக்கியவாறே குளித்து முடித்து அலமாரியில் நான்கைந்து நாட்களாக கழுவாமல் தொங்கும் கதர்ச்சட்டைகளில் ஏதாவது ஒன்றை எடுத்து அணிந்துகொண்டு டிப்டாப்பாக பின்வாசல் வழியாக வெளியே வந்து வீட்டு ஓனர் கண்ணில் படாமல் அடுத்த தெருவுக்கு வருவதற்கே மதியம் ஒன்றரை தாண்டிவிடும். மூன்றே இட்லிகளை இருபத்தி அய்ந்து ரூபாய்க்கு வாங்கி சட்னியுடன் சாப்பிட்டு அடிவயிற்றை அடைய இரண்டரை மணியாகிவிடும்.

பசியால் அடைத்திருந்த காதுகள் தன்னிலை அறிந்து புத்துணர்ச்சி பெறும். பிறகு காந்தி லைப்ரரி முன்றலில் நண்பர் கூட்டம். அவர்கள்தான் கடந்த ஆறு மாதங்களாக உணவுக்கான அனுசரணை என்று கூறுவதில் முன்பிருந்த வெட்கம் இப்போதில்லை. பிறகு அன்பு எனும் அன்புதாசனின் காசில் தான் இரவுச்சப்பாத்தி. இரவு வீடு வந்த சேர மணி 12 தாண்டும். தூக்கம் செல்ல எப்படியும் அதிகாலை நான்காகிவிடும். நான் ஒரு மதுப்பிரியரும் கூட. தற்காலிகமாக என் பொருளாதார நிலைமந்தம் என்னை குடிக்கவிடாமல் ஆக்கிவிட்டது என்பது தான் கவலையான உண்மை. இத்தனைக்கும் நான் வெறும் ஓர் எழுத்தாளரே. இப்போதெல்லாம் எழுத வாய்ப்புகள் சரிவர அமைவதில்லை என்பதை விட எழுத விருப்பமே இல்லை எனலாம். எந்தப்பத்திரிகையும் என் எழுத்துக்களை ஆதர்சிக்க விரும்பா நிலையில் நான் வேலையற்றவனாக ஆக்கப்பட்டு ஆறு மாதங்களாகின்றன. இப்போதெல்லாம் வாசிக்க வாசிக்க கண்ணில் பிழைகள் மட்டும் தான் தனியாய் தெரிகிறது. எல்லார் படைப்பிலும் குறைகாண்கிறேன். விதியைப் பொருத்தவரையில் குடும்பஸ்தனாகும் வக்கு எனக்கு இருக்கவில்லை போலும் என எண்ணிக்கொள்வேன்.

காந்தி லைப்ரரிக்கு முன்பாய் அளவளாவும் நேரங்களில் பத்து விழுக்காடு நேரம் என் கண்கள் நேரெதிராக உள்ள பஸ்நிலையத்தில் தான் சுற்சி இயக்கமாற்றும். எப்போதும் எல்லாரும் அழகாய் தெரிய மாட்டர்களே. சிரிப்பு, நடை, துப்பட்டா, உதட்டுச்சாயம், கைக்கடிகாரம், சரிசெய்யப்படும் ரவிக்கை என்று தினமும் சாமான்ய பெண்ணொருத்தியின் அழகின் கூறுகளில் சில கணங்கள் லயித்திருப்பேன். பின்பு மீண்டும் அரட்டையில் ஆழ்ந்து விடுவேன். அன்றும் அவ்வாறே ஒருத்தியின் பாதணிகளை இரசித்தேன். மாட்டுத் தோலால் தான் அது செய்திருக்க வேண்டும். அவள் காற்பெருவிரலிடையில் கறுப்பாய் ஒரு மரம் கிளைகொண்டது போல் இருந்தது. அந்தப்பாதணிக்கு அவ்வளவு விலை இருக்காது எனினும் என் மனைவியாக வரும் ஒருவளுக்கு அதை வாங்கிக்கொடுக்கலாம் என்ற நப்பாசை எழுந்தது.

ஷாதிர் அஹமட்

அவள் முகம் தான் சரியாக தென்படவில்லை. யாரோ ஒரு முதியவர் தோளில் வைத்திருந்த பயணப்பொதி அவள் முகத்தை மட்டும் மறைத்திருந்தது. இத்துணை நயப்பில் பாதணியே தெரிவுசெய்த அவள், பிரம்மனிடம் அடம்பிடித்தாவது ஒரு அழகிய முகத்தை வாங்கி வந்திருக்கமாட்டாளா?.. ஒரு சாமானியப்பெண்ணின் அழகின் கூறாக என்னால் அவளை மட்டும் கடந்துவிட முடியவில்லை. ஏதோ எனக்காகவென்று என்னமோ வைத்திருக்கிறாள் போன்று தோன்றியது.

பரீட்சை மண்டபத்தில் முன்னால் அமர்ந்திருக்கும் மாணவன் சற்று முதுகை விலத்த மாட்டானா. கொஞ்சமாவது அவனது

விடை தென்படாதா என ஏங்கியிருக்கும் மாணவனை போல...
நண்பர்களுடன் பேச்சுவாக்கில் அந்த முதியவர் சற்றாவது விலகமாட்டாரா என உள்ளூர ஸ்ரீ ராமஜெயம் ஜெபித்துக்கொண்டிருந்தேன்.

என் பிராத்தனை வீண்போகவில்லை.. என்ன காற்று வீசியதோ தெரியவில்லை முதியவர் சற்று விலக அவள் திருமுக தரிசனம் கிடைத்தது...

என் கணிப்பும் அவ்வளவாக பொய்க்கவில்லை. என்ன சற்றே வித்தியாசம்.. அவள் அழகியாகத்தான் இருப்பாள் என்று நினைத்திருந்தேன். அவளோ பேரழகியாக அல்லவா இருக்கிறாள் !!. ஆசுவாசமான அந்த மாலைப்பொழுது, சினம் சற்றுத்தணிந்திருந்த மெல்லிய காற்று, பஸ் ஸ்டாண்டுக்கு பின்னாலிந்து மஞ்சளும் சிவப்பும் கலந்து ஒரு சில்ஹவுட் விளைவு என்று அது ஒரு தெய்வீக தரிசனமாகவே எனக்குத் தோன்றியது. கடவுளே!! என்ன திடீரென்று உனக்கு என்மேல் அவ்வளவு பாசம்? .
எங்கோ பார்த்துப்பழகிய முகம் தான். சட்டென்று நியாபகத்திற்கு வரவில்லை. தொண்டைக்கும் குரல்வளைக்கும் மத்தியில் ஏதோ ஒன்று சிக்கி நிற்கிறது. அவள் பக்கப்புறமாக தலையை சாய்த்திருந்தாள். முகம் முழுவதுமாய் தென்படவில்லை.. சற்றாவது திரும்பமாட்டாளா...
“கடவுளே... !!"

"அட, நம்ம கண்மணி!!!!"

கடந்த மூன்று மாதங்களிற்கு முன்புதான் கண்மணியை ரயில் நிலையத்தில் வைத்து ஏதேர்ச்சையாக காணக் கிடைத்தது. அன்றும் அது தூரதரிசனம் தான்.

இன்று சற்று இளைத்துவிட்டாள் போன்று தோன்றியது. மூன்றே மாதத்தில் இவ்வளவு இளைக்கமுடியுமா? .
ஏன் முடியாமல். படிக்கிற பொண்ணு.. ஏதேனும் பரீட்சை அது இது என்று சரியாக சாப்பிடாமல் இருந்திருப்பாள்.

கண்மணி என்சித்தியின் ஒன்றுவிட்ட அண்ணண் மகள். அவள் பெற்றோர் அடிக்கடி வெளியூர் செல்வதால் இவள் பெரும்பாலும் சித்தப்பா வீட்டில் தான் தங்கிஇருப்பாள். பிளஸ் டூ முடித்துவிட்டு கண்ட கண்ட இலக்கியங்களில் மூழ்கிப்போய் வீட்டில் வீ. ஐ. பி ஆக படு பிஸியாக சும்மா இருந்த வேளைகளில் நான் தான் எனது லுமாலாவில் இவளை அடிக்கடி பாடசாலைக்கும் டியூசனுக்கும் ஏற்றி இறக்குவேன்.

இன்று எவ்வளவு வளர்ந்துவிட்டாள். அடையாளமே தெரியாமல் வளர்ந்துவிட்டாள்.

ஒருவேளை இவள் வேறு யாராவதாக இருக்கலாமோ? .

இல்லை இல்லை. இவ்வளவு அழகாக இருக்கிறாள்;
அதெப்படி கண்மணியாக இல்லாமல் இருக்கமுடியும்.

அவள் என்னை பார்த்து ஒரு முறை கூட குறுநகைக்கவில்லை தான்.ஆனால் நான் எக்கச்சக்கமான தடவைகள் சிரித்திருக்கிறேன் . சிரித்து மட்டும் தான் இருக்கிறேன்.

உண்மையில் எனக்கு ஏற்கனவே கண்மணி மீது காதல் இருக்காமல் இல்லை. நெடிதுயர்ந்த அவளை கட்டிப்பிடுத்து கூந்தல் மணத்தில் மூர்ச்சையாகியிருக்கிறேன்.இருள் முற்ற அவளின் உதட்டில் முத்தமிட்டு முடிந்ததும் மழை பேய்ந்து ஓயந்த இலையின் கடைசித் தண்ணீர் திவலையாக நழுவி விழுந்திருக்கிறேன். கண்மணியின் காதல் சிந்தி தேன் வந்து நனைக்கும் ஓர் வஸ்துவாய் நான் இருந்திருக்கிறேன் என சிந்தித்த நாட்களுக்கு கணக்கில்லை. முகை, முகிழ், மொட்டென மலரொன்று மலரவே அத்தனை நிலைகளை கடக்க வேண்டியிருக்க நீ மட்டும் எப்படி இலகுவாய் என் மனதில் பூத்தாய்?. சில நேரங்களில் உன்னை வாஞ்சையுடன் காதலிக்கிறேன். உண்மையுடன் காதலிக்கிறேன். அதேபோல் இன்னும் சில நேரங்களில் வீதியில் கிடக்கும் சாணத்தை முகர்ந்தது போல மூக்கினை

மூடிக்கொள்கிறேன்.சில நேரங்களில் தாயைவிட்டுப்பிரிந்த சிட்டுக்குருவியாய் ஏங்கிப்போகிறேன். இதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை எனக்கு.நான் ஏதோ உரைநடை எழுதப்போகிறேன் என்று கூறியதை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டவள் நீ. அதே எழுத்தாளனை வக்கற்றவன் என்று கூறி என்னை விட்டுச்சென்ற நாளிலிருந்தே உன்னை தேடிக்கொண்டிருக்கிறேன்.

பேரூந்திலிருந்து இறங்கி நடந்து போகும் அவளது செருப்பு தடங்களுக்கு நோகாமல் அதற்கு மேலே என் செருப்பு தடங்களை பதிக்க நெடுநாள் முயற்சி செய்தேன் . என் செருப்பு தடத்தை விட அவளின் செருப்பு தடம் சிறியதாகத்தான் இருந்தது."ஒன் வயசுக்கு இதெல்லாம் ஜாஸ்தி "என்று கூறும் நண்பர்களை என்கூட அலைக்கழிக்கவும் செய்திருக்கிறேன். வறுமை ,பசி ,பட்டினி ,சோர்வு ,கவலை மட்டுமே நிரம்பி இருந்த என் வாழ்க்கையை அவள் வழித்தடங்களும் நிரப்பின.

“ பின்னாடி ஒரே ஒருத்தன் தானே



இருக்கிறான். ஏண்டி திரும்பி கூட பாக்க மாட்டேங்கற ?”

என்று நிறைய தடவைகள் உரக்கவே என் மனதுக்குள் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அவளுக்கு அது கேட்டிருக்க வாய்ப்பில்லை. நான்கு மாதங்கள் கடந்தன .ஒரு நாள் அவள் செல்லும் கல்லூரிக்கு முன்னால் உள்ள ஒரு டீக்கடையில் டீ குடிக்காமல் அவளுக்காக காத்திருந்தேன். என்னை எனது வக்கற்ற தன்மைக்காக உதாசீனம் செய்வது என்பது கூட காரணமாக இருக்கலாம் . அதுக்காக இவ்வளவு தூரம் வந்து நீ பேச மட்டும் ஆரம்பித்துவிட்டால் உன் மூச்சடங்கும் வரை உன்னோடு இருக்க மாட்டேனா? கொஞ்சம் சிந்தித்துப்பார். வாழ்க்கையின் அமாவாசை இரவுகளை எல்லாம் நிலவொளி கொண்டும் ஒளி பாய்ச்சி பிரகாசிக்கச் செய்த உனக்கு, என் வாழ்க்கையில் இடம் தர மறுத்து விடுவேனா? எழுத்துக்களில் வடித்திருக்கிறார் பிரகாசித்திருக்க வைத்திருக்கிறார் இதைவிட எனக்குப் பெரிதாக செய்துவிட முடியும் என்றெல்லாம் சிந்தித்திருக்கமாட்டாயா . வயது கடந்த காதலா என்றெல்லாம் எனக்குத்தெரியாது. ஆனால் உன்னை கடைசிவரை காப்பாற்ற என் மனதில் உறுதி இருக்கிறது என்று மட்டும் எனக்கு தெரியும் . மனதில் உறுதி இருந்தென்ன, என் பர்ஸ் காலியாகத்தான் இருக்கிறது என்றெல்லாம் என் மனதில் தோன்றும் புதிய புதிர்களை அடக்கி அடக்கி மூளை நிரம்பிக் கொண்டிருந்தது. ஆறு மாதங்கள் கழித்து ஒரு நாள் அவளை என் வாடகை வீட்டின் பின்வாசல் வழியாக வெளியேறும் போது கண்டேன். பின்வாசல் திறந்து வெளியேற அந்த பாதையோரமாய் நடந்து சென்று கொண்டிருந்தாள். அவள் எனக்காக வந்திருக்கக் கூடாதா என்று ஏங்கி செத்தது தான் அதிகம் . அன்று யாரோ ஒரு தோழியை சந்திக்க வந்திருந்தாள் போலும்.

நான் வளர்ந்ததெல்லாம் என்னை விமர்சித்த, என் வளர்ச்சியில் பிரியப்படாத, ஏனோ தானோ என்று என்னைப் பார்த்த சித்தப்பாக்கள், மாமிகளின் மத்தியில்தான். அதனால்தானோ என்னவோ நானும் மற்றவர்களின் குறைகளையும்

வினைகளையுமே தேடுவேன். ஆனால் என் கண்கள் நிறைகண்டது அவளில் மட்டும் தான்.

எப்போதும் அருகில் இருக்காவிடினும் மனக்கதவோடு இருக்க சிலர் தேவைப்படுகின்றனர்.படித்து முடித்த ஒரு புத்தகத்தின் தூசு படிந்த பக்கங்களை பல வருடங்களின் பின் திறக்கும் போது மின்னலாய் வந்து செல்லும் வாசிப்புடனான நினைவுகள் போல எமக்கும் வாழ்க்கையில் மீட்டிப்பார்க்க சில கணங்கள் தேவையாகின்றன.அவை கசப்புடனோ உவர்ப்புடனோ இருப்பதில் பாரபட்சம் பார்க்க முடியாது.

அவளை என்றும்போல் இன்றும் பின்தொடர்கிறேன். நாச்சியார் கோவில் சந்தியில் வைத்து எத்தனை நாள் தான் நாமளும் பனிப்போரிலேயே இருப்பது. ஆயுதமேந்தும் வேளைவந்துவிட்டது என்று மனச்சாட்சி கூக்குரலிட போர்விமானத்திலிருந்து விழும் அணுகுண்டுகளாய் சொற்கள் அவளை நோக்கி விரைந்தன.

"கண்மணி "

"கண்மணி நில்லு" என்று கூப்பிட திரும்பிப் பார்த்து

"என்னையா கூப்பிடுறீங்க?" என்று சங்கோதத்துடன் கேட்டாள். பைத்தியக்காரி அவளைத்தானே நான் கூப்பிட முடியும்.

கறுப்பினாலான துணியில் அவள் பற்கள் மட்டுமன்றி முகம், பாதம், கைவிரல்கள் என்று எனக்கு எல்லாமே வெண்மையாய் தெரிந்தது.

" ஏன் கண்மணி என்ன உனக்கு தெரியலயா?" என்று கேட்க

"என் பேரு 'கயல்விழி'ங்க.நீங்க என்ன வெற ஆரோன்னு நெனச்சு பேசுறீங்க" என்று எதிர்தாக்குதல் நிகழ்த்திவிடுட்டு சென்றுவிட்டாள். அன்றைய சூரியன் அமிழ்ந்து மறைந்து போனது. பல வாரங்கள் காத்திருந்தும் அந்த பேரூந்து நிலையப்பக்கமாக அவளைக்காணவே இல்லை. அவளின் பாதணிகள் பட தரை ஏங்கிக்காத்திருக்கிறது. ஒருதடவை நான் தான் உங்க கண்மணி என்றிருந்தால் செத்தா போயிருப்பாள். கல்நெஞ்சக்காரி.இப்படியான பல பிரளயங்களுடன் கண்மணிகள் எனக்குத் தெரியும்.


# தூமியின் இணையதளம்





தூமியின் சகல மின்னிதழ்களையும் இந்த இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

https://thumi-org.github.io
இந்த இணைப்பினூடு எமது இணையதளத்திற்கு செல்லலாம்.

அல்லது கூகிள் தேடு பொறியில் (Google search bar) துமி அமையம் என தட்டச்சு செய்வதன் மூலம் எமது இணையதளத்திற்கு செல்லலாம்.





# THE COBRA EFFECT

*Butterfly Effect* என்பது பொதுவாக அனைவரும் அறிந்த விடயம் தான். அதாவது ஒரு இடத்தில் நிகழும் சிறிய நிகழ்ச்சி வேறு ஒரு இடத்தில் நிகழ வேண்டிய நிகழ்ச்சி நிரலில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும். உதாரணமாக 'துப்பாக்கி' திரைப்படத்தில் காஜல் அகர்வால் விஜய்யின் பைக் சாவியை எடுத்துச் சென்றுவிடுவார். இதன் காரணமாக பஸ்ஸில் பயணிக்க நேரும் விஜய்யிடம் எதிர்பாராத விதமாக ஒரு ஸ்லீப்பர் செல் மாட்டிக்கொள்ள அவனை வைத்து மும்பையில் 12 இடங்களில் நடைபெறவிருந்த தீவிரவாதத் தாக்குதலை தடுத்தது மட்டுமல்லாமல் இறுதியில் ஸ்லீப்பர்செல்களின் தலைவரையும் தீர்த்துக்கட்டிவிடுவார். ஆக காஜல் அகர்வால் விஜய்யினுடைய பைக் சாவியை அன்று எடுத்திருக்காவிட்டால் விஜய்யும் பஸ்ஸில் சென்றிருக்க மாட்டார்; ஸ்லிப்பர் செல்லும் அகப்பட்டிருக்க மாட்டான். எனவே 12 இடங்களில் திட்டமிடப்பட்ட தாக்குதலையும் முறியடித்து இருக்க முடியாது. எனவே பைக் சாவியை எடுத்த அந்த சாதாரண நிகழ்வுத்தான் பல்வேறு மாற்றங்களுக்கு திரைக்கதையில் வித்திட்டது. இதுதான் நாம் அடிக்கடி கேள்விப்படுகின்ற *Butterfly Effect*. "சரி,அதெல்லாம் இருக்கட்டும் முதல்ல *Cobra Effect* என்றால் என்ன அத சொல்லு ? " என்ற உங்கள் கேள்விக்கணைகளுடன் துமியின் மறுபக்கத்திற்குள் நுழைவோம்.



இந்த பெயர் எவ்வாறு வந்தது என்பதை ஆராய நாம் காலச்சக்கரத்தில் சற்று பின்னோக்கி பயணிக்க வேண்டும். அது இந்தியாவை பிரிட்டிஷார் ஆட்சி செய்த காலப்பகுதி. அவ்வேளை இந்தியாவினுடைய தலைநகரான தில்லியில் நாகப்பாம்புகளின் அட்டகாசம் அளவு கடந்துச் சென்றது. அவற்றின் விஷத்தன்மையினால் ஏற்பட்ட எண்ணிலடங்கா மரணங்கள் அனைவரையும் பீதியில் உறைய வைத்தது. எனவே இதனை எவ்வாறேனும் கட்டுப்படுத்தி ஆக வேண்டும் என்ற நோக்கில் பிரிட்டிஷார் ஒரு திட்டத்தை முன்மொழிந்தனர்.அதாவது அவர்கள் கொல்கின்ற நாகப்பாம்புகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களுக்கான தக்க வெகுமதி வழங்கப்படும் என்பதே அந்த திட்டமாகும். மக்களும் ஆர்வ மிகுதியால் பல்வேறு நாகப்பாம்புகளை கொன்று சன்மானங்களைப் பெற்றுக் கொண்டனர். ஆனால் காலப்போக்கில் பணத்தாசை அதிகரிக்க மக்கள் நாகப்பாம்புகளை பண்ணைகளில் வளர்க்க வெளிக்கிட்டனர். இதனை அறிந்த பிரிட்டிஷார் உடனடியாக அந்த திட்டத்தை ரத்துச்செய்ய ஆத்திரமடைந்த பொதுமக்கள் உடனடியாக பண்ணைகளில் இருந்த நாக பாம்புகளை தப்பிக்க விட்டனர். இதனால் முன்பிருந்ததை விட நாகப்பாம்புகளின் எண்ணிக்கை பன்மடங்காகியது. இதுதான் காலப்போக்கில் *Cobra Effect* எனும் பதத்திற்கு அடியெடுத்துக் கொடுத்தது.

கோபி பிரகாஷ் திருக்குமரநாதன்

சுருக்கமாகச் சொன்னால் ஒரு பிரச்சினைக்கு தீர்வாக நாங்கள் முன்வைக்கும் விடயம் அப்பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தினால் அதுவே *Cobra Effect* ஆகும். இவ்வாறுதான் 1980ம் ஆண்டு மெக்சிகோ நகரத்தில் அண்ணளவாக 18 மில்லியன் கார்கள் பொதுமக்கள் மத்தியில் பாவனையில் இருந்தமையால் வளியானது மிகவும் மோசாமாக மாசடைந்தது. எனவே மெக்சிகோ அரசாங்கம் *Hoy No Circula* என்ற சட்டத்தை அறிமுகம் செய்தது. அதனடிப்படையில் *Winter* காலப்பகுதியில் நாளொன்றுக்கான கார் பாவணையை 20

மறுபக்கம்

சதவீதத்தினால் குறைக்கும் பொருட்டு கார்களின் லைசன்ஸ் ப்ளேட்டின் இறுதி இலக்கங்களை வைத்து சில விதிமுறைகளை விதித்தது. ஆமா நீங்க யோசிக்கிறது சரி தான். கொரோனா Timeல நம்ம அரசாங்கம் IC நம்பர வச்சு வெளிய அனுப்பின அதே Technique தான். ஆனால் விளைவோ முன்பு இருந்ததை விட வளிமாசடைதல் மேலும் துரிதமடைந்தது.



அரசாங்கம் இவ்வாறு போக்குவரத்தில் விதிமுறைகளை விதித்தாலும் மக்களது அன்றாட வாழ்க்கை முறையில் மாற்றம் ஏற்படவில்லை எனவே அவர்கள் பாடசாலைகள், அலுவலகங்கள், பொது இடங்கள் என்று வழமை போல தங்கள் பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டித்தான் இருந்தது. எனவே இந்த விதிமுறைகளால் குறித்த சில பகுதியினரே அரசாங்கம் எதிர்ப்பார்த்தவாறு பொதுப்போக்குவரத்து வாகானங்களை பயன்படுத்தினர். ஆனால் பெரும்பாலானோர் டாக்ஸிகளை நாடினர். இவ்வாறு டாக்ஸிகளை மக்கள் நாடியதன் விளைவாக சாதரணமாக மக்கள் கார்களை பயன்படுத்திய காலத்தை விட தற்போதைய அதிகரித்த டாக்ஸிகளின் பாவணையால் வளிமாசடைதல் மேலும் அதிகரித்தது. இன்னும் ஒருசாரார் ஒருபடி மேலேச் சென்று மலிவான சில கார்களை புதிதாக விலைக்கு வாங்கி பொருத்தமான வேறு அனுமதி இலக்கத்துடன் தங்களுடைய முந்தைய கார் ஓடுவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட நாளில் புதிதாக வேண்டிய கார்களை ஓடிச்சென்றனர். இந்த மலிவான கார்கள் வழமையாக அவர்கள் பயன்படுத்தும் கார்களை விட வளி மாசடைதலை இரட்டிப்பாக்கி விட்டன. என்ன இந்த தடவை நாகப்பாம்புகளின் பணியை அந்த கார்கள் செய்து விட்டன. இவ்வாறு உலகளாவிய ரீதியில் Cobra Effectஇற்கு உதாரணமாக பல்வேறு நிகழ்வுகளை அடுக்கி கொண்டேச் செல்லலாம்.

விதியினை மதியால் வெல்லலாம் என்று கூறுவது வழமை ஆனால் அந்த மதியே விதியை விபரிதமாக்கிவிடுவதன் பெயர் தான் இந்த கோப்ரா Effect. ஒரு அடிமைத்தனத்திலிருந்து மீள்வதற்காக இன்னொன்றுக்கு அடிமையாவது என எமது அன்றாட வாழ்க்கை முறையில்கூட இவ்விளைவு சர்வ சாதாரணமாக ஏற்படத்தான் செய்கிறது. உணவு வலையில் ஒரு சங்கிலியில் மாற்றம் ஏற்பட்டால் கூட அது ஒரு மனித இனத்தையே பேரழிவிற்கு ஆழ்த்திவிடும் என்பதற்கு உதாரணம் தான் 1958இல் Mao Zedong இனால் கொண்டுவரப்பட்ட Four pest Campaign திட்டம். எலி, கொசு, ஈ, குருவியை அழிக்க கொண்டு வரப்பட்ட திட்டத்தால் இரண்டு வருடங்களில் பஞ்சம் தலைவிரித்தாடி 43 மில்லியன் மக்கள் பஞ்சம் தலைவிரித்தாடி பசியால் இறந்து கூட Cobra Effect. மனிதன் தன்னை எப்பொழுதெல்லாம் தன்னுடைய ஆறறிவு ஆற்றலால் பெருமைக்கொள்கின்றானோ அப்போதெல்லாம் அவனை காலடியில் முட்டிபோட இயற்கை அன்னை எடுக்கும் அவதாரங்கள் கூட இந்த கோப்ரா Effectகுள் தான் அடங்குகின்றன.

அவ்வளவு ஏன் நமது நாட்டில் கொரோனாவை கட்டுப்படுத்த அரசாங்கம் ஊரடங்கை அறிவிக்க மக்கள் பெற்றோல் செட்டை ஆக்கிரமித்து முட்டி மோதியது கூட இந்த Cobra Effectதான்.



# குடாநாட்டின் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கான உபாயமுறைகள் 5

அதிரன்

## கல்வியியல்சார் இடங்கள்

யாழப்பாணத்தில் கல்விப்புலம் சார்ந்து காணப்படும் இடங்கள் அண்மைக்காலமாக சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்றமை முக்கியமானதொன்றாகும். அவ்வாறான இடங்களில் பின்வருவன முக்கியம் பெறுகின்றன.

- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம்
- யாழ்ப்பாணப் பொதுசன நூலகம்
- திருவாசக அரண்மனை மற்றும் நூதனசாலை



### யாழ் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் கல்வியியல் சார்ந்து முக்கியம் பெறுகின்ற சுற்றுலா இடங்களில் முதன்மையானதாகும். வட புலத்தின் கல்வி வளர்ச்சியில் தனக்கென தனியான இடத்தினைக் கொண்டு இயங்கிகொண்டிருக்கிறது. வெவ்வேயான கட்டடக் கலை அம்சங்களையும் தனித்துவ அமைப்பினையும் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளதனை அவதானிக்க முடிகின்றது. அண்மையில் அமைக்கப்பட்ட முகப்பு நுழைவாயில் கட்டட அமைப்பு சற்று வித்தியாசமானது. செனட் கட்டடத்துடன் இணைந்த கலைப் பீடம் மற்றும் பரமேஸ்வரன் கோவில் உள்ளிட்ட அம்சங்களே அதிகமானோரைக் கவர்கின்றன.

### யாழ் பல்கலைக்கழக நூலகம்



யாழ் பல்கலைக்கழக நூலகம் விஞ்ஞான பீடத்திற்கும் கலைப்பீடத்திற்கும் நடுவில் பரமேஸ்வரன் ஆலயத்திற்கு தென்மேற்கில் இராமநாதன் வீதியை நோக்கி அமைந்துள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது சிறிய நூலகமாக ஆரம்பிக்கப்பட்டு இன்று யாழ் பல்கலை மாணவர்களின் அறிவுப்பசியினைத் தீர்த்துக் கொண்டு கம்பீரமாகக் காட்சி தருகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினைத் தரிசிக்க வரும் அனைவரும் பல்கலைக்கழக நூலகத்தையும் கண்டுகளிக்கின்றனர்.

### யாழ்ப்பாணப் பொதுசன நூலகம்

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்டு யாழ் மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதானத்தின் எதிரே யாழ்ப்பாண நகருக்குப் பெருமை சேர்க்கும் வகையிலும் அழகு சேர்க்கும் வகையிலும் கம்பீரமாகத் தோற்றமளிக்கும் அறிவாலயம் தான்



யாழ்ப்பாணப் பொதுசன நூலகம். சென்னை அரசின் கட்டடக் கலை நிபுணர் கே.எஸ்நரசிம்மன் அவர்களின் வரைபட உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தின் கல்விக் கலாசாரத்துக்கு முக்கியமான ஒரு நிலையம் என்றால் எமக்க முதலில் நினைவுக்கு வருவது யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் தான். ஒரு காலத்தில் தென்னாசியாவின் மிகப் பெரிய நூலகமாக இடம்பிடித்த இந் நூலகம் 1981ஆம் ஆண்டு ஏறத்தாழ 97000 நூல்களுடன் தீக்கிரையானாலும் பல ஆர்வலர்களுடைய அயராத உழைப்பினாலும் உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியினாலும் தற்போது மீளவும் புதுப்பொலிவுடன் யாழ் நகரத்தின் மத்தியில் பொறியியலாளர் திரு.ந.நடேசன் மற்றும் கட்டடக்கலை நிபுணர் வி.எஸ்.துரைராசா ஆகியோரின் பங்களிப்பில் தாஜ்மகால் கட்டடத்தினை போன்ற கட்டட அம்சங்களுடன் கம்பீரமாகக் காட்சி தருகின்றது. யாழ்ப்பாணத்திற்கு வருகின்ற வெளிநாட்டு மற்றும் தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகள் தரிசிக்கின்ற முக்கியமான மையங்களில் இதுவும் ஒன்றாகும்.

### திருவாசக அரண்மனை மற்றும் நூதனசாலை

யாழ்ப்பாணத்தின் நாவற்குழிப் பகுதியில் கடந்த வருடம் அமைக்கப்பட்டு அதிகமானோரின் கவனத்தினை ஈர்த்த இடங்களாக முக்கியம் பெறுகின்றன. சைவத் தமிழ் பாரம்பரியத்தில் திருவாசகத்துக்குள்ள முக்கியத்துவத்தினை அடையாளப்படுத்தும் நோக்கில் உலக மொழிகள் பலவற்றில் திருவாசகம் மொழிபெயர்க்கப்பட்டு பிரம்மாண்டமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதனை அவதானிக்க முடியும். அதன் அருகே அமைக்கப்பட்டுள்ள நூதனசாலை சைவத் தமிழர்களின் பழம்பெரும் பொருட்களைக் அழியாது காக்கின்ற மகத்தான நோக்கில் அமைக்கப்பட்டுள்ளது. தமழி மக்கப் பாவித்த செப்பு மற்றும் பித்தளைப் பொருட்கள் அதிகமாக காட்சிக்கென வைக்கப்பட்டுள்ளன. இவ்விரு இடங்களும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்ற முக்கிய சுற்றுலா மையாமாக எழுச்சி பெற்று வருவதனை நோக்கலாம்.

## கடற்கரைகள்

யாழ்ப்பாண மாவட்டத்தினைப் பொறுத்த வரை சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நோக்கில்ஒரு சில கடற்கரைகளே காணப்படுகின்றன. அவ்வாறனவற்றுள் பின்வருவன முக்கியம் பெறுகின்றன.

- கசூரினா கடற்கரை
- சாட்டி கடற்கரை
- மூர்க்கம் கடற்கரை
- பண்ணைக் கடற்கரை

### கசூரினா கடற்கரை

வட மாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து 20 கி.மீ தொலைவில் காரைநகர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் காரைநகர் ஊரில் அமைந்துள்ள அழகிய கடற்கரையே கசூரினா கடற்கரை ஆகும்.





தினமும் வெளிநாட்டு உல்லாச பிரயாணிகளையும் தென்னிலங்கை மக்களையும் கவர்ந்து மக்கள் வந்துபோகும் பிரதான சுற்றுலா தளமாக விளங்கும் கசூரினா கடற்கரை பிரபலமானதற்கு காரணங்கள் இங்கு அளவான அலையுடன் சரிவு குறைவான கடல் மண்ணும் அமைந்திருப்பதால் கடலில் குளிப்பவர்களுக்கு இது இதமான அனுபவமாக அமைந்துள்ளது. கடற்கரை மணற்பரப்பில் அழகிய வடிவங்களில் சிப்பி, சங்கு, கடற்கல் போன்றவை கிடைக்கும் என்பதால் இங்கு வரும் உல்லாச பிரையாணிகள் நினைவாக இவற்றை சேகரித்து செல்லுவர்.



இந்த கடற்கரையில் நின்று பார்க்கும் போது ஆங்கிலேயரால் பல நூற்றாண்டுகளுக்கு முன் கடற்போக்குவரத்து அடையாளமாக கட்டப்பட்ட கலங்கரை விளக்கம் எனப்படும் வெளிச்ச வீடு தென்படும். கசூரினா என்பதற்கு சவுக்கு மரம் என்ற அர்த்தம் இருப்பதாகவும் சவுக்கு மரங்கள் நிறைந்து காணப்படும் பகுதியாக இந்த கடற்கரை காணப்படுவதால் இந்த பெயர் ஏற்பட காரணமாக இருந்தது எனவும் செவிவழி தகவல்கள் உண்டு.



யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரதான சுற்றுலாதுறை வருவாய்க்கு கசூரினா கடற்கரை மிகமுக்கியமான பங்கு வகிப்பது குறிப்பிடத்தக்கது.

### சாட்டி கடற்கரை

வடக்கில் உள்ள சிறந்த நீச்சலுக்கான கடற்கரையாக சாட்டி கடற்கரையைக் குறிப்பிட முடியும். இக்கடற்கரை இப்பொழுது நாட்டின் பல பாகங்களில் இருந்து வரும் மக்கள் மத்தியில் பிரபல்யமாகிக் கொண்டிருக்கிறது. நிறையவே மக்கள் வந்து குவியும் உல்லாச பொழுது போக்குக்கு உகந்த ஒரு கடற்கரைப் பிரதேசமாக இது மாற்றியமைக்கப்பட வேண்டுமானால் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற வேண்டியுள்ளது.

### பண்ணைக் கடற்கரை

யாழ்.கோட்டை பகுதியின் பின் புறமாக அமைந்துள்ள பண்ணை கடற்கரை பகுதி மெருகூட்டப்பட்டு பொழுது போக்கு இடமாக மாற்றப்பட்டுவருகின்றது. கடலினுள் இறங்கி நடப்பதற்கு ஏற்ப பாலம் அமைக்கப்பட்டுள்ளதுடன் மாலைவேளைகளில் பெருமளவான மக்கள் வந்து கடற்கரை அழகை ரசிப்பதோடு அங்கு நடைபயிற்சிகளையும் உடற்பயிற்சிகளையும் மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# எங்கே செல்கிறோம் நாம்??

வாழையடி வாழையாய் தொடர்கிறது
அடக்குமுறை..
பள்ளி செல்லும் மாதர் எல்லாம் பற்றை
காடுகளில் இச்சை பொருள்களாய் எங்கே
செல்கிறது எம்மவர் வாழ்வு?
பெண்ணாக பிறந்தால் பெருமையுண்டென
பிறப்பால் நானும் பெருமை கொண்டேனே..
மண்ணாகி போகும் வாழ்வு என்று மாதர்
நாமும் நினைத்திலோமே...
பெண்ணியம் என்று பெருமை கொள்வதால்
மட்டும் பெண்ணடிமைத்தனம் இங்கு
நீங்கிடுமா?
மேடைகள் தோறும் முழக்கமிட்டுக்
கொள்ளும் மேதைகளே உங்கள் சிந்தையில்
கொஞ்சம் பெண்களை நினையுங்கள்.

கட்டிலுக்கும் தொட்டிலுக்கும் மாட்டுக்
கொட்டிலுக்குமிடையில் முடிந்து போனது
எம்மவர் வாழ்வு
இப்படி போனால் எப்படி விடியும் எங்களின்
வாழ்வு...!
கிருஷாந்தி முதல் வித்தியாவரை இன்று
எத்தனை குழந்தைகள் இத்தனை பெரிய
பூமியில் இருப்பிடம் தெரியாமல் அழிந்து
போயினர் இல்லை இல்லை
அழிக்கப்பட்டனர்...
ஆளுமையுள்ளவர்களே அறிவிழந்து
போகையில்
போதையில் உள்ளவர்களை புறஞ்சொல்லி
எங்கனம்?

பள்ளி சென்றால் பற்றைக்குள் வன்முறை
பல்கலை சென்றால் பகிடிவதையில்
வன்முறை
வரம்பு மீறும் வன்முறைகளால் தன்மானம்
இழந்து போகிறோம் யாம்...
மண்துறந்த புத்தனுக்கே நம் மண் மீது
பேராசை எனில்
துகிலுரிக்கும் துச்சாதனர்கள்
துணியமாட்டார்களா என்ன?
பாவம் நாங்கள் கொஞ்சம் எங்களையும் வாழ
விடுங்கள் !!

தேசம் போற்றும் வைத்தியர்
உலகம் வியக்கும் விஞ்ஞானி
பாட்டிசைக்கும் பாடகி
ஏடு புகட்டும் ஆசிரியர்
கவி பாடும் கவிஞர்
அனைத்தும் தெரிந்த அறிவியலாளர் என
எத்தனை பதவிகள் எமை தேடி வரினும்
அடுப்பங்கரைகளில் ஆணாதிக்கத்தின் அசுர
பிடிகளில் எப்படி எழுவோம் யாம்?

தன்னம்பிக்கை எல்லாம் தவிடு பொடியாகி
தாங்கொணா துயரத்தில் தற்கொலைகள்
முடிவாகி இருளோடு இருளாகி போவோம்
யாமும் ஒருநாள்.....
மண்ணை மீறாமலே விதையும்
முளைக்குமா?
விதைகள் நாம் விருட்சங்களாக மாட்டோமா?
வாழ விடுங்கள் எங்களை
வழி தாருங்கள் வாழ்வதற்கு
பூமியும் பெண் தானே
உன்னை பெற்றவளும் பெண் தானே
புரிந்து கொள் மானிடமே....

**வன்னித் தமிழச்சி**



# சித்திராங்கதா

காவ்யமோகன்

ஆடல் 08

**கூத்து**

கூத்து. மனம் ஆசையோடு கேட்கும் கதை. பாடல் வழியாக கதையை சொல்லும் கலை. கதையும் கவிதையுமாய் நீதி உரைக்கப்படும்போது அது எல்லோராலும் களிப்போடு ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

கரிய நிற மைபூசிய முகத்துடனும், தலையில் தலைப்பாகையும், காலில் சலங்கையும், கையில் ஒரு வாளுடனும், பல வர்ணத்துணிகளால் ஒட்டுப்போட்ட ஓர் அங்கியை அணிந்த தொப்பைக்கூத்தாடியாக கட்டியக்காரன் மேடை ஏறினான். அவன் மேடை ஏறியதும் அரண்மனைத்தோப்பில் இருந்த அனைவரும் ஏககாலத்தில் பரவசமாய் கைதட்டினர். கட்டியக்காரன் காலில் அணிந்திருந்த சலங்கை இசையுடன் இணைந்து பாடத் தொடங்கினான்.

'இந்துமா கடனிலிலே இலங்கும் நாடு இது
ஈழமென புகழ் துலங்கும் வீடு இது
செந்தமிழ் ராவணன் ஆண்டது
எந்திறன் எல்லாளன் எழுந்த பூமி'

அவன் சலங்கையின் ஜதி மாற மாற பாடலின் சந்தமும் மாறிக்கொண்டுருந்தது.

'மன்னர் மன்று பரராஜ
சங்கிலிய மகராஜா
மணிமுடி புனையுமெங்கள்
மண்ணின் வரோதயர்க்கு
வணக்கங்கள் முதற்கண்ணாய்
வந்தனங்கள் அவையோர்க்கு'

சங்கிலியனும் மலர்ந்த முகத்துடன் ஆசனத்தில் அமர்ந்தபடியே பதில் வணக்கம் தெரிவித்தான்.

'ஆதரணை புகழ் மந்திரி என்றும்
ஓதரும் திறன் தந்திரி
மாதம் மாறி மாரி பொழியுதோ
ஆண்ட சாதனையை பேசுதோ?'

கேளிக்கையை உணர்ந்த மாதிரி மந்திரி ஏகாம்பரனாரும் சிரித்தபடியே வணங்கினார்.

'நாற்றிசையும் கதிகலக்குந் திறன்
ஆற்றுஞ்சே னாதிபதியே'

என கட்டியக்காரன் பாடும் போதே மகிழாந்தகன் ஆசனத்தில் இல்லாததை சங்கிலியன் கண்டான்.

'மந்திரியாரே, மகிழாந்தகன் எங்கு போனான்?' எனக் கேட்டபோது மந்திரி ஏகம்பரனார் வீரர்களின் துகிலில்லங்கள் அமைந்திருந்த திசையில் சேனாதிபதியும் பெருவணிகர் எச்சதத்தனும் வந்துகொண்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

'நீதியுறு மன்னவரும் சீரு மனிதர்களும்
வாழ்ந்திருந்து புண்ணியருள்
செய்துவந்த தஞ்சைநகர்
பெரும்படை திடவீர
சிங்கத்துடன் வந்தடைந்தர்

ஓது மொழி உண்மையுள்ளான்
கல்வியுகப்பும் உள்ளான்
ஊக்கமுள்ளான் வருணகுலத்தான்
மேலும் பல வளமையுள்ளான்
வந்தடைந்தான் ஈழமண்ணை
வந்தனங்கள் பலகோடி'

என்ற போது கூட்டத்தோர் எல்லாரும் பெரும் ஆரவாரமாய் ஒலி எழுப்பினர். வருணகுலத்தான் எழுந்து கட்டியக்காரனையும் அவையோரையும் வணங்கி அமர்ந்தான்.

அந்நேரம் மகிழாந்தகனும் எச்சதத்தனும் வந்து சேர்ந்தார்கள். எச்சதத்தன் மூவரையும் வணங்கியபடி அரசனின் அருகில் வந்து நின்றான்.

'வாருங்கள் எச்சதத்தரே, நல்ல சமயத்தில் வந்திருக்கிறீர்கள். தங்களை சந்திக்க நானே எண்ணியிருந்தேன். முத்துக் குளிக்கும் காலமல்லவா இது. தற்சமயம் முத்துவாணிபம் பற்றி தங்களிடம் வினவ இருந்தேன்' என்றான் சங்கிலியன்.

'அரசே, தற்போது நிலமை முன்பைப்போலல்ல என்று தான் கூற

வேண்டும். முத்துக்களை அள்ளித்தந்த மன்னார்க்கடல் பறங்கியர் வசமானதால் நம் வணிகர்கள் பெருமளவில் நட்டமடைந்துள்ளனர். யாழ்க்கரையோரங்களிலும் முத்தெடுக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆயினும் சொல்லும்படி பயனில்லை. மன்னார்க்கடல் முத்துச்சிப்பிகளும் நம் வணிகர்கள் கொள்வனவு செய்ய இயலாதபடி ஏலம் கூவப்படுகிறது' என்றார் பெருவணிகர் எச்சதத்தன்.

'ஓகோ - மன்னார் கடல் கைவசமானதால் பறங்கியர் இம்முறை பெருலாபம் காண துடிக்கிறார்கள் போலும். யார் வளங்களை யார் விற்பது? மூடர் கூட்டத்தின் திட்டங்கள் முடியும் வேளை நெருங்குகிறது. எச்சதத்தரே, வருத்தம் வேண்டாம். தஞ்சையிலிருந்து படைகள் வந்துவிட்டன. இனி அவர்கள் முடிவு மிக விரைவில் தீர்மானிக்கப்படும்' என்றவாறே சங்கிலியன் வருணகுலத்தானிற்கு பெருவணிகர் எச்சதத்தனை அறிமுகம் செய்து வைத்தான்.

இயல்பாகவே முத்துக்கள் மீது பெரும்பிரியம் கொண்டிருந்த வருணகுலத்தான் வழியில் ஊராத்துறையை அடையமுன் கண்ட முத்துக்குளித்தல் காட்சியையும் மனதில் நினைந்து வியந்தவாறே பெருவணிகர் எச்சதத்தரை வணங்கினான்.

அந்நேரம் சேனாதிபதி மகிழாந்தகன் அரசரை நோக்கி 'அரசே, எச்சதத்தரை நான் இப்போது அவசரமாக அழைத்து வந்தமைக்கு ஒரு காரணம் இருக்கிறது. எச்சதத்தர் இப்போது அடிக்கடி மன்னாரிற்கு சென்று வருவதால் அவர் மூலம் நான் ஒரு முக்கிய விடயத்தை தெரிந்து கொண்டேன்' என்றான்.

'என்ன அது சேனாதிபதி?' என ஆவலுடன் கேட்டான் சங்கிலியன்.

'அரசே, வருணகுலத்தாரின் ஊர்வலத்தில் ஏதோ அசம்பாவிதம் நிகழ்த்த திட்டம் தீட்டுவதாக எச்சதத்தனார் எனக்கு ஏற்கனவே அறிவித்திருந்தார். ஆதலால் எந்த சமயத்திலும் ஆபத்து நிகழலாம் என விளிப்போடே நான் இருந்தேன். அதனாலே அந்த ஈட்டிப்பாய்ச்சலை என்னால் எதிர்கொள்ள முடிந்தது. இது குறித்து தங்களிடம் முன்னரே அறிவிக்காமைக்கு என்னை மன்னிக்க வேண்டும். ஆயினும் அந்தக்கோழைக்கூட்டத்திற்கு பயந்து வருணகுலத்தார் ஊர்வலத்தை நிகழ்த்தாமல் இருக்கக்கூடாது என்பதாலே இது குறித்து நான் எதையும் தெரியப்படுத்தவில்லை' என்றான்.

'தைரியமான முடிவைத்தான் எடுத்துள்ளாய் மகிழாந்தகா, நல்லது. ஆனால் என் மனம் ஏதோ குழப்பத்தில் உள்ளது' என்றவாறே சங்கிலியன் ஆழமான சிந்தனையில் இருந்தான்.

மேடையிலே பறங்கியர் போல் வேசமிட்டு சிலர் படையணியாக முன்னேறி வந்தனர். அப்போது கட்டியக்காரன் குரலில் ஆவேசமாய் பாடல் ஒலிக்கிறது.

'துறைக்கிறங்கி வந்திட்டானோ?
பறங்கி மெத்தக் கர்வம் அது
கொண்டிட்டானோ?



தீவாகரன்

தீர பராக்கிரம வீர சுர சேன படை விரைந்திடு
கோடிக்கோடிக் காலம் முடி சூடி நாங்கள்
ஆண்ட தேசம்
இதென்ன நாடோடி பேடியரால் கூடிவந்து
பிடித்திடச்செருக்காமோ?

அவர் செருக்கை அடக்கி நாம்
முடிப்போமோ?
வீட்டுக்கொரு வீரர் இந்த நாட்டைக் காக்க
வீறு கொண்டு
நாடி வரும் பகை ஓடி ஒழிந்திடும்
நாட்டிலெங் கொடி கோட்டையில் சூடிட
துறைக்கிறங்கி வந்திட்டானோ..'

சங்கிலியன் திடீரென்று ஏதோ ஞாபகம் வந்தது போல் எச்சதத்தரை பார்த்து 'எச்சதத்தரே இந்தச்சதித்திட்டம் தீட்டியவர்கள் பற்றி ஏதும் அறிவீர்களா?' எனக் கேட்டான்.

சேனாதிபதி அவசரமாக 'அரசே அதிலின்னுமா சந்தேகம். இது மிக்கபிள்ளை ஆராச்சியின் வேலை தான். ஆனாலும் அந்த காத்தவராயனை நான் முன்னர் எங்கோ பார்த்திருக்கிறேன். அதனால் எனக்கு வேறு ஒருவர் மீதும் சந்தேகம் இருக்கிறது' என்றான்.

'யார் அது?' என்றான் சங்கிலியன்.

' என்னால் உறுதியாக சொல்ல முடியாது அரசே, ஆதலால் இப்போது நான் சொல்வது சரியாகாது' என்றான் ஒரு தடுமாறிய குரலோடு.

எச்சதத்தர் அரசரை நோக்கி 'அரசே மிக்கபிள்ளையோடு சேர்ந்து வன்னி அரசர் வன்னியத்தேவரும் பறங்கியரோடு இணைந்துவிட்டதாய் மன்னார் பக்கம் பேச்சு நடக்கிறது' என்றான்.

'என்னது வன்னியத்தேவனா? அவனுக்கு என்ன நேர்ந்தது? அவன் பறங்கியருடன் சேர வேண்டிய காரணம் ஏன் வந்தது' என ஆச்சரியம் தாங்காதவனாய் கேட்டான்.

மந்திரி ஏகாம்பரனார் ' அரசே பறங்கியர் அரியணை ஆசை காட்டியே எல்லோரையும் தம் வசப்படுத்துவதில் வல்லவர்களாம். அவ்வாறே வன்னியத்தேவனையும் அவர்கள் மனமாற்றம் செய்திருக்கக்கூடும்' என்றார்.

வருணகுலத்தானும் ' ஆம் அரசே, பிரித்தாளும் கொள்கையே பறங்கியன் வியூகம். அந்த வகையில் இவ்வாறான செயல்களை அவர்கள் செய்வதில் ஆச்சர்யம் ஏதுமில்லை' என்றான்.

'என் வியப்பு பறங்கியன் குறித்தல்ல வருணகுலத்தாரே, எம் வீரக்குடிகள் பற்றியனவே. எதை எதிர்பார்த்து பறங்கியனுடன் இணைகிறார்கள். எல்லாவற்றையும் இழப்பதற்கா துணைபோகிறார்கள்? ' என வருத்தம் மிகுந்த குரலில் செல்லிக் கொண்டிருந்தான்.

மேடையில் கட்டியக்காரன் பாடிக்கொண்டிருக்கிறான்.

'அந்நியரின் வெறி வருடிய பேடிகள்
அன்னை மண் உங்கள்
வெண்ணியத்தோடுகள்

கன்னித்தமிழ் மண்ணைக் காட்டியே
கொடுத்திட்டீர்
தனமானம் இழந்தவமானமே அடைந்திட்டீர்

எச்சினில் எய்தனை நக்கிய நாய்களே
இச்சைகள் தீர்ந்ததா சொக்கிய பேய்களே
பச்சைத்துரோகிகள் பதவிதான் பெரிதென்று
நிச்சயம் பறங்கி பாதமே கழுவுவீர்'

என்ற கட்டியக்காரனின் ஆவேச வரிகள் எங்கோ தொலைவில் இருப்போர்க்கு மட்டுமல்லாமல் கோட்டைக்குள் இருந்து கொண்டிருக்கும் சிலரின் மனதிலும் உறுத்தலை உண்டாக்கியது. ஆனால் யாரும் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. வெளிக்காட்டவும் மாட்டார்கள்.

இரவு நள்ளிரவாக மாறும் பொழுதில் கூத்தின் நிறைவுப்பாட்டு ஒலித்தது.

'சங்கப்புலவர் பணி எங்கும் பெருகும் இனி
தங்கத்தமிழர் திரு பொங்கரசாழ்வர்'

# வழுக்கியாறு சூழற்தொகுதியின் அமைப்பும் தொழிற்பாடும் 4

T.K.மதி

## வழுக்கியாறு குளத்தொகுதியின் சிறப்பம்சங்கள்


இலங்கையை பொறுத்தவரையில் பாரம்பரிய குளங்கள் எனும்பொழுது உலர்வலயத்தில் காணப்படும் அநுராதபுரக் குளங்களே வரலாற்று ரீதியாகவும் அமைப்பியல் ரீதியாகவும் பொதுவாக குறிப்பிடப்படுகின்றது. இவ்வாறான பாரம்பரியக்குளங்களை பெரிய நடுத்தர மற்றும் சிறிய குளங்கள் என மூன்று வகைப்படுத்தலாம். இவற்றில் ஓரளவான நடுத்தர மற்றும் பெரும்பாலான சிறிய குளங்களும் குளக் கிராமங்களின்(Tank village system) முக்கிய ஆக்கக்கூறாக காணப்படுகின்றன. குளக்கிராமங்கள் எனும் பொழுது ஒவ்வொரு குளங்களையும் மையமாகக் கொண்டு ஒவ்வொரு கிராமிய சமூகக்கட்டமைப்பு சமுதாயங்களாக இயங்குகின்றன. ஒரு கிராமிய குள சூழற்தொகுதியில் குளம், வயல் நிலங்கள், மக்கள் குடியிருப்புக்கள், இயற்கைக்காடு, வணக்கஸ்தலம் (விகாரை) என்பன பிரதான அம்சங்களாகும்.

வழுக்கியாற்று சூழற்தொகுதியினை நோக்கும் போது அங்கு நாம் மேற்கூறியது போன்ற கிராமியகுளம் சார் சமூக சமுதாய அமைப்பினை காண முடியாது இருப்பதுடன் அதற்கு மாறாக பட்டி அமைப்பினை அவதானிக்க முடியும். வழுக்கியாற்று சூழற்தொகுதியில் நாம் மூன்று வகையான முக்கிய பட்டிகளை இனம்காண முடியும். அவற்றில் முதல்பட்டியாக குளங்கள் மற்றும் கால்வாய்களை கொண்டமைந்த நீர்நிலைகள் அமைவதுடன் புவியியல் தோற்ற அமைப்பில் மிகத்தாழ்வான பகுதியில் காணப்படுகின்றது. இதனை நாம் நீல நிற பட்டியாக வர்ணிக்க முடியும். இரண்டாவது பட்டியாக குறித்த முதற்பட்டிக்கு இருபுறமும் காணப்படும் வயல் நிலங்களை கொள்ளமுடியும். யாழ்பாணத்தில் காணப்படும் மண் வகை மஞ்சள் நிற லக்றோசோல் என்பதால் இப்பட்டியை மஞ்சள் நிறமாக வர்ணிக்க முடியும். இது தரைத்தோற்ற அமைப்பில் ஓரளவு உயர்ந்த பகுதியாகும். அதற்கு வெளிப்புறமாக இருபுறமும் மக்கள் குடியிருப்புக்கள் காணப்படுகின்றன.

வழுக்கியாற்று வடிநிலப்பகுதியில் குறிப்பிட்டு சொல்லும்படியான காடுகள் எவையும் காணப்படவில்லை ஆயினும் மக்கள் குடியிருப்புப் பகுதியில் பரவலாக ஆண்டுத் தாவரங்களையும் இயற்கை வனத்தாவரங்களையும் அவதானிக்க முடிவதுடன் கைவிடப்பட்ட தரிசு நிலங்களை ஆக்கிரமித்து காணப்படும் முட்புதர் மற்றும் பற்றைக்காடுகளையும் குறிப்பிடமுடியும். இவை பச்சைத் தாவரங்களாக காணப்படுவதால் இப்பகுதியை பச்சை நிறப்பட்டியாக வர்ணிக்கமுடியும். தரைத்தோற்ற அமைப்பில் இது உயர்ந்த பகுதியாகும்.

பொதுவாக பாரம்பரிய அநுராதபுரக்குளங்கள் ஒப்பீட்டளவில் உயர் நிலப்பகுதியில் அமைந்திருப்பதுடன் வயல் நிலங்கள் குளத்தைவிட தாழ்வான பகுதிகளில் காணப்படும். ஆனால் வழுக்கியாற்று வடிநிலப்பகுதியில் குளங்கள் கால்வாய்கள் மிகத்தாழ்ந்த பகுதியில் அமைந்திருப்பதுடன் வயல்நிலங்கள் ஒப்பீட்டுரீதியில் உயர்ந்த நிலப்பகுதியில் அமைந்து காணப்படகின்றது. இதுவே வழுக்கியாற்று குளத்தொகுதிக் கட்டமைப்பை இலங்கையின் பாரம்பரிய குளத்தொகுதிக்கட்டமைப்பில் இருந்து வேறுபடுத்திக்காட்டும் மிகப்பிரதானமான அம்சமாகும். பாரம்பரிய அநுராதபுரக் குளங்களில் இருந்து நீரானது புவியீர்ப்பு

விசைக்கு சார்பான முறையில் வயல் நிலங்களுக்கு பாச்சப்படுவதுடன் வழுக்கியாற்றுப்பகுதியில் இதற்கு முற்றிலும் மாறாக புவியீர்ப்புவிசைக்கு எதிரான முறையில் நீர் நிலைகளில் இருந்து நீரை உயர்த்தும் பொறிமுறை மூலமாக நீர் உயர்த்தப்பட்டு பின் புவியீர்ப்பு விசைக்கு சார்பான முறையில் வயல் நிலங்களுக்கு பாச்சப்படுகின்றது. இதற்காக பிரத்தியேக தொழில்நுட்பத்தினை ஆதிகாலத்தில் இருந்து தமிழர்கள் அறிந்து வைத்திருப்பது சிறப்பம்சமாகும்.




ஆறு ஓடும்...

# துவண்டு போனவர்களுக்கு தோள் கொடுக்கும் தூய உள்ளங்களைப் போற்றுவோம்!

முல்லைத்தீவு, இருட்டுமடுவில், நோய்வாய்ப்பட்டு கணவனால் கைவிடப்பட்ட நிலையில் மிகுந்த வறுமையில் எட்டு வயது மகளுடன் வாழும் பெண்ணுக்கு,

கனடா தேசத்து உறவுகளான,

திரு.திருமதி. அனுசுயா தில்லைநடராஜா,
திரு.திருமதி. ஜெயசந்திரன்
திரு.திருமதி. லாவண்யா பொன்னுதுரை

ஆகியோரின் நிதிப் பங்களிப்பில், நிலாஷ் அமையத்தின் ஒருங்கிணைப்பில், துமியினூடாக, ரூபாய். இரண்டு இலட்சத்து நாற்பத்தையாயிரம் வைப்பு நிதி வழங்கப்பட்டது!

திறமையாக கல்வியைத்தொடரும், குறித்த பெண்ணின், மகளின் எதிர்காலக் கனவுகளுக்கு இன்றே சிந்தித்து உதவும் நன்கொடையாளர்களைத் துமி வாழ்த்தி வணங்கி நிற்கின்றது!



'இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல் குலனுடையான் கண்ணே யுள'

# சீதனம் (Dowry)

அ.திருமருகன்
மாணவன்
இலங்கை சட்டக்கல்லூரி

திருமணம் ஒன்றின் போது மனைவியினால் கொண்டுவரப்படும் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் அனைத்தும் "சீதனம்" என்று பொருள் கொள்ளப்படும்.

பண்டைய தேசவழமையின்படி பெண்பிள்ளைகள் அவர்களுடைய தாயினது சொத்துக்களையும் ஆண்பிள்ளைகள் அவர்களின் தந்தையினது சொத்துக்களையும் தமது வழியுரிமையாக பெறுவார்கள் என்ற நிலை முற்றாக மாற்றமடைந்து சீதனமானது தனது தந்தையின் முதுசம், தாயின் சீதனம் மற்றும் பெற்றோரினுடைய திருமணத்தின்போது உழைக்கப்பட்ட சொத்தான தேடிய தேட்டத்திலிருந்து வழங்கப்பட முடியும் என்ற நிலை காணப்படுகிறது.

சீதனம் வழங்கப்படுவது என்பதனுடைய 'குறிக்கோள் அல்லது நோக்கம்' என்ன என்பதினை *'Matrimonial Property and Gender Inequality - A Study of Thesawalamai'* என்ற நூலில் குறிப்பிடப்பட்டவற்றை எடுத்து நோக்கின் சீதனம் வழங்கப்படுவதற்கான முக்கிய நோக்கமாக கருதப்படுபவை இரண்டு விடயங்களாகும்:




1. புதிய வீட்டுத் தேவைகளுக்கான ஏற்பாட்டினை செய்தல்.
2. திருமணத்திற்கான பிரதிபயனாக சீதனம் வழங்குதல்.

சட்ட அறிஞர்கள் பலரினுடைய கருத்துக்களை எடுத்து நோக்கினால் 'சீதனம்' ஆனது திருமணம் என்கின்ற ஒரு மிகப்பெரிய சுமையை தாங்குவதற்கென பெண் ஒருவரினால் அல்லது அவர் சார்பில் எவரேனும் ஒருவரால் கணவனுக்கு வழங்கப்படுகின்ற சொத்துக்கள் என்று ஒரு கருத்தும் காணப்படுகிறது.

சீதனம் வழங்கப்படுகின்ற குறிக்கோளை இலங்கையினுடைய நீதிமன்றங்களினால் தீர்க்கப்பட்ட சில வழக்குகள் எடுத்தியம்பி உள்ளன. உதாரணமாக 'முருகேசு எதிர் சுப்பிரமணியம்' வழக்கில் சீதனம் வழங்குவதற்குரிய குறிக்கோளானது பெண் ஒருவர் தனது புதிய வீட்டினை அமைக்கும் நோக்கில் அவருக்கு ஏற்பாடு ஒன்றை செய்வதற்கானது என்று கூறப்பட்டது.

சட்ட அறிஞர் வூட் இனுடைய கருத்துப்படி சீதனம் ஒன்றினை வழங்குவதற்கான பொறுப்புடைமையாது பெண் பிள்ளைக்கு ஒரு அதிசிறந்த திருமணத்தை பெற்றுக் கொடுப்பதற்கான பெற்றோரினுடைய கடப்பாடில் இருந்து எழும் ஒரு செயல்முறை என்று கூறப்படுகின்றது.

"தேசவழமை நியதிகளின்படி பெண் ஒருவர் திருமணம் செய்யும் போது அப்பெண்ணுக்கு சீதனம் வழங்குவதற்கான கடப்பாடு உண்டு என தேசவழமைச் ஏற்பாடு செய்கின்றது."

ஆயினும் இது ஒரு சட்டக்கட்டுப்பாடு அல்ல ஆயினும் இது ஒரு ஒழுக்கக்கட்டுப்பாடு ஆகவே கருதப்பட முடியும்.

பெரும்பாலான பெண்கள் தங்களுக்கான கணவரை சீதனம் என்ற வழிவகையினூடாகவே பெறுகின்றனர் என்றும் அத்துடன் சொத்திற்காகவே அநேக ஆண்கள் திருமணம் செய்வதாகவும் தேசவழமை குறிப்பிடுகின்றது.

'ஜெயசேகர எதிர் வணிகரட்ணம்' வழக்கில் சீதனம் ஆனது ஆண் ஒருவர் பெண் ஒருவரை தனது மனைவியாக ஏற்றுக் கொள்வதற்கு அந்த ஆணுக்கு வழங்கப்படுகின்ற பிரதிபயனாகவே சீதனம் உள்ளது என்று கூறப்பட்டது.

சீதனம் ஆனது பெண் ஒருவருக்கு எப்போது கொடுக்கப்படலாம் என்று எடுத்து நோக்குகையில் தேசவழமையினுடைய நியதிகளின் படி பெண்பிள்ளை வளர்ந்து திருமணம் செய்யக்கூடியதாக இருக்கின்றபோது சீதனம் வழங்கப்பட

முடியும் என்று கூறுகின்றது. ஆனபோதும் இலங்கையினுடைய நீதிமன்றங்களின் தீர்ப்புக்களின்படி திருமணம் ஒன்றிக்கான எதிர்பார்ப்பில்லாத போதும் கூட பெற்றோர்கள் தமது பெண்ணுக்கு சீதனம் ஒன்றை கொடுக்க முடியும் என்றும் திருமணம் ஒன்றின் முன்னதாக பெண்ணிற்கு எவற்றை கொடுக்க வேண்டும் என்று தீர்மானிப்பதை வழி வழியாக காணப்படும் வழக்காறுகள் தடுக்கவில்லை என்று கூறுகின்றது.

ஆகவே தேசவழமையினால் ஆளப்படும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு சீதனத்தினை திருமணம் ஒன்றின்போது அல்லது திருமணத்தின் நீண்டகாலம் முன்னரோ அல்லது திருமணம் நிறைவேறிய பின்னர் நீண்ட காலம் கழித்த நிலையில் கூட வழங்க முடியும்.

*Matrimonial Property and Gender Inequality - A Study of Thesawalamai* நூலில் பெண் ஒருவர் பருவம் அடைந்த பின்னர் எவ்வேளையிலும் சீதனம் வழங்கப்பட முடியும் என்று குறிப்பிடப்படுகின்றது.

பத்மநாதன் எதிர் ஐயாத்துரை வழக்கிலே திருமணத்தின் பின்பு நீண்ட காலம் கழிந்த நிலையில் அதாவது கணவன் இறந்த பின்னர் நன்கொடை வழங்கப்பட்டது.

உறுதியில் "இராமலிங்கநாதன் விதவை எனது மகள் பொன்னம்மாவுக்கு ஏற்கனவே நிறைவேற்றியுள்ள திருமணத்தின் பிரதிபயனாகவும் நான் சீதனம் தருவேன் என செய்யப்பட்ட வாக்குறுதியின் பிரதிப்பயனாகவும் நான் இதனகத்துக் குறிப்பிட்ட காணிகளை சீதனம் என்ற வழிவகையாக அளிக்கின்றேன்" என குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வழக்கில் நீதியரசர் அலஸ் சீதனம் அளிப்பதற்கான முன்பதான கடப்பாட்டின் தொடர்ச்சியாக நிறைவேற்றல் என்பதுடன் திருமணத்திற்கான பிரதிபலனாக இருப்பதற்கான ஏற்பாடுகள் திருப்தி செய்வதாக தீர்ப்பளித்தார்.

ஆகவே ஒரு உறுதியில் இருந்து அது ஒரு நன்கொடை உறுதியா அல்லது சீதன உறுதியா என்று அறிய முடியும்.

சீதன உறுதியில் "அன்பு மற்றும் பாசத்தின் பிரதிபயனாகவும் சொல்லப்பட்ட திறத்தவர்களிடையிலான திருமணத்திற்கான பிரதிபயனாகவும்" என்ற சொற்கள் காணப்பட முடியும்.

சாதாரண நன்கொடை உறுதியிலே "அன்பு மற்றும் பாசம் காரணமாக" கொடுக்கப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது. எனவே இங்கு அவதானிக்கப்பட வேண்டியது 'திருமணத்தின் பிரதிபலனாக' என்பதாகும்.

சாரல் தூறும்.....



இவ்வாரம் படம் சொல்லும் கதை

# என் இதயம் எழுதும் சொல்

மாயா

8

மீண்டும் மெல்ல சென்று ஆதியின் கதவைத் திறந்து எட்டிப்பார்த்தவள் அங்கே ஆதி இயல்பாக வேலை செய்வதைப் பார்த்து ஒரு கணம் குழம்பித்தான் போனாள். ஆனாலும் அவனுடன் பேச வேண்டுமே! மெல்ல அவன் அருகில் சென்று

"சார்" என்று அழைக்கவும் கம்ப்யூட்டரின் திரையில் இருந்து கண்ணை எடுக்காமலே எதையோ டைப்பிக் கொண்டு இருந்தவன்

"சொல்லுங்க ஆராதனா!"

என்று கேட்டான். ஒரு பெருமூச்சுடன்

"நீங்க! இல்ல.. உங்களுக்கு முதலே என்னைத் தெரியுமா?"

என்று கேட்கவும் ஆதியின் விரல்கள் ஒரு கணம் நின்று மீண்டும் டைப்பின!

"சார்! உங்களத் தான்"

"இங்க நீங்க வர முதல் எப்போவாச்சும் என்னைப் பார்த்து இருக்கீங்களா ஆராதனா?"

"இல்ல்..இல்லை"

"பிறகு! நான் மட்டும் எப்பிடி உங்களைக் கண்டு இருப்பேன்?"

"அது! ஷ்யா! ஷயாம்" என்று அவள் திக்கவும் ஒரு கணம் விரல்களை இறுக மூடித் திறந்தவன்

"அது என்னோட அண்ணா! நான் இல்லை! உங்களுக்கு அவனோட கதைக்கனும் என்டா அவன் கூட கதைங்க! சும்மா என் உயிரை வாங்காதீங்க"

என்று இரையவும் ஒரு கணம் திடுக்கிட்டு போனவள் ஒரு பெருMஉச்சுடன்

"சார்! எனக்கு தலைவலியா இருக்குது! லீவ் வேணும்"

என்று இரும்புக் குரலில் கூறினாள். அவளை நிமிர்ந்து பார்த்தவன் கலங்கிய கண்களைக் கண்டு எதுவும் கூறாமல் செல்லுமாறு சைகை செய்த்தான். அவள் வெளியேறியதும் மூச்சு முட்டுவது போல இருக்கவும் டையை சற்று தளர்த்தியபடி கதிரையில் சாய்ந்தவனுக்கு பழைய நியாபகங்கள் போட்டி போட்டு மனத்திரையில் வரத் தொடங்கியது.

ஷ்யாம்! ஆதியின் உண்மையான பெயர். ஆதி ஷ்யாமின் அண்ணாவின் பெயர். ஆதி ஷ்யாமின் பெற்றோர் பரம்பரை பணக்காரர்கள். பணம் இருந்தாலும் குணம் இருக்கும் தம்பதியினர். ஆதி பிறந்தவுடன் மூத்தபிள்ளை ஆதலால் அவனை பாசத்தால் குளிப்பாட்டிக்கொண்டு இருந்தனர். அவ்வேளை தான் ஆதியின் அன்னை இரண்டாம் முறை கருத்தரித்து ஷ்யாமை பெற்றேடுத்தார். ஆதியும் தம்பி என்று ஆசையாக இருந்தாலும் போக போக பெற்றோரின் பாசம் ஷ்யாமிற்கே செல்வதை கண்டு பொறாமையில் ஷ்யாமின் மேல் வன்மம் வைக்கத் தொடங்கினான். ஆனால் ஷ்யாமிற்கோ அண்ணா என்றால் எதுவும் செய்வான். இருவருக்கும் இரு வயது இடைவெளியே இருந்ததால் அவனின் அண்ணா சொல்வதை அப்படியே அச்சு பிசகாமல் செய்வான். ஆனால் புத்திசாலி. ஷ்யாமில் இருந்த கோவத்தில் அவனுக்கு எதாவது செய்யவேண்டும் என்று எண்ணிய ஆதி அன்று அவனிடம் பாடசாலை முடிந்ததும் சற்றுத் தள்ளி இருக்கும் கடையின் அருகில் தனக்காக காத்து இருக்க சொல்லி இருந்தான். ஷ்யாமும் அண்ணா வருவான் வருவான் என்று எண்ணி பார்த்துக் கொண்டு நின்றானே ஒழிய அண்ணா தன்னை விட்டு விட்டு வீடு சென்று இருப்பான் என்று யோசிக்கவே இல்லை. ஆதியும் ஷ்யாம் சிறிது நேரத்தில் வீடு வந்து விடுவான் என்று யோசித்தானே ஒழிய அவனை யாரும் கடத்துவார்கள் என்று யோசிக்கவே இல்லை. யோசிக்காதவை எல்லாம் நடப்பது தானே வாழ்க்கை!!

ஆதிக்காக காத்து இருந்த ஷ்யாமின் அருகே வந்த ஒரு பெண் ஒரு பையை தூக்கி வந்து அவன் அருகில் வைத்துவிட்டு அப்படியே தலையில் கையை வைத்து அமர்ந்துகொண்டாள். அவளைப் பார்க்க பாவமாக இருக்கவும் அவள் அருகில் சென்ற ஷ்யாம்

“ஆன்டி! நான் ஏதாச்சும் ஹெல்ப் பண்ணவா?”

என்று கேட்கவும் அவனைப் பார்த்து புன்னகைத்தவள்

"அதோ அது மட்டும் என்கூட என்னோட பையை தூக்கிட்டு வருவியா? எனக்கு ஏலாம இருக்கு" என்று கேட்டாள்,

இயற்கையிலேயே இரக்க குணம் கொண்டவன் ஷ்யாம். அவனும் தலையை ஆட்டியபடி அவளது பையை தூக்க உதவி பண்ணுவதாக கூறி ஒரு பக்கம் பிடித்துக் கொண்டான். மெல்ல மெல்ல அவளது வீட்டின் அருகே செல்லவும் ஷ்யாமின் மனதில் பயம் பிடித்துக் கொண்டது!

"ஆன்டி! நான் போகனும்.'

என்று கூறி விரைவாக திரும்பியவனின் முகத்தில் ஏதோ நீர்த்திவலைகள் பட்டது மட்டும் தான் அவனுக்குத் தெரியும். முழித்துப் பார்க்கும் பொழுது அவளது வீட்டினுள் ஒரு மூலையில் இருந்தான். கண்ணைக் கசக்கிவிட்டுப் பார்த்தால் மறுமூலையில் ஏதோ உடையைத் தைத்தவாறே இவனை விகாரமாகப் பார்த்துக் கொண்டு இருந்தாள் அந்தப் பெண். அவளது பார்வையிலேயே பயம் அதிகரிக்க எழப்பார்த்தவனுக்கு அப்பொழுது தான் அவனது கை கால்கள் கட்டி இருப்பதையே காணக் கூடியவாறு இருந்தது. சோர்ந்து அமர்ந்தவன்

"ஆன்டி! என்னை போக விடுங்க"

என்று அழுகுரலில் கேட்கவும் அப்பெண்ணின் முகம் விகாரமாக மாறியது! "ஆன்டியா? அம்மா! அம்மா சொல்லு"

என்று இரைந்து கொண்டே அவனருகில் வந்தாள். உடனே பயத்தில் "சொல்லுறன்! சொல்லுறன்"

என்றவாறே சுவரோரம் ஒடுங்கியவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை, அந்த பெண் இவனை அடிக்கவில்லை! துன்புருத்தவில்லை! ஆனால் கால்களை இறுக்க வயர்களால் கட்டி எதிரே அமர்ந்து விகாரமாக பார்த்த படியே இருந்தாள். அவனும் எட்டு வயது சிறுவனல்லவா! பயத்தில் அந்த இரவு தூங்கவே முடியாமல் போனது! இங்கே ஆதியோ பெற்றோர் ஷ்யாமைக் காணாமல் அழுது கரைவதையும் ஷ்யாமைக் காணாத தவிப்பினாலும் தனது அறையின் அழுது கொண்டே இருந்தான். அன்று இரவு வெளியே சென்ற அந்தப் பெண் திரும்ப வரும் பொழுது ஒரு ஐந்து வயது பெண்ணை அழைத்துக் கொண்டு வந்தாள். மருண்ட பார்வையால் அந்த வீட்டைப் பார்த்தவாறே அந்த ராட்ஷஷியை அண்ணாந்து பார்த்து



"ஆன்டி! அம்மா எங்க?"

என்று கேட்ட அந்த குட்டிப் பெண்ணின் முகம் ஷ்யாமிற்கு நன்கு நினைவில் இருந்தது! அவள் ஆராதனா!

முடிச்சுக்கள் அவிழும்...






2011 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ரஷ்ய மருத்துவர் குழாம் யுவராஜ் சிங் புற்றுநோயால் பாதிக்கப்பட்டதை உறுதி செய்தது. யுவராஜ் சிங் ரஷ்யாவில் தங்கி இருந்து புற்றுநோய்க்கான சிகிச்சையை மேற்கொண்டார். 2012 ஏப்ரல் மாதமளவில் முற்றுமுழுதாக குணமடைந்து நாடு திரும்பினார். நோயில் இருந்து குணமடைந்த யுவராஜ் சிங் இன் கிரிக்கெட் எதிர்காலம் எப்படி இருக்க போகிறது என்ற எதிர்பார்ப்பு அனைவருக்கும் இருந்தது. அத்தோடு 2012 இல் இலங்கையில் T-20 உலகக்கோப்பை நடைபெற இருந்தது. யுவராஜ் சிங் பயிற்சிகளை தொடங்கி இருந்தாலும் ஒரு நீண்ட இடைவெளியின் பின்னர் அணியில் இடம் கிடைக்குமா என்ற கேள்வி எழாமல் இருக்கவில்லை. ஆனாலும் தேர்வாளர்கள் யுவராஜ் மீது நம்பிக்கை வைத்தனர். T-20 உலகக்கோப்பைக்கான 15 பேர் கொண்ட இந்திய அணியில் யுவராஜ் சிங் சேர்க்கப்பட்டு இருந்தார்.

அக்னி

முதல் போட்டியில் நியூசிலாந்து அணியுடன் 21 பந்துகளில் 34 ஓட்டங்களை குவித்தார்.



ஆனாலும் அந்த போட்டியில் இந்திய அணி 1 ஓட்டத்தால் தோல்வி அடைந்தது. அதனை தொடர்ந்த போட்டிகளில் துடுப்பாட்டத்தில் சாதிக்க தவறினாலும் பந்துவீச்சில் அசத்தினார். இந்திய அணி ஆடிய 5 ஆட்டங்களில் மொத்தமாக எட்டு இலக்குகளை வீழ்த்தி இந்திய அணி சார்பாக அதிக இலக்குகளை வீழ்த்திய பந்துவீச்சாளரானார். ஆனாலும் அந்த தொடரில் இந்திய அணி இரண்டாம் சுற்றோடு வெளியேறியது.

அதனை தொடர்ந்து 2012 பெரிய இடைவெளியின் பின்னர் பாகிஸ்தான் அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள், 2 T-20 போட்டிகள் கொண்ட தொடரில்



பங்கேற்றது. அதில் அகமதாபாத் இல் நடைபெற்ற இரண்டாவது T-20 போட்டியில் 36 பந்துகளில் 72 ஓட்டங்களை குவித்து இந்திய அணிக்கு வெற்றி தேடி கொடுத்தார். ஆனாலும் ஒருநாள் தொடரில் சொல்லிக்கொள்ளும்படி சோபிக்க தவறினார். அடுத்து நடைபெற்ற இங்கிலாந்து தொடரும் சேர்த்து நடைபெற்ற 7 ஒருநாள் ஆட்டங்களில் ஒரே ஒரு அரைச்சதமே பெற்றிருந்தார். 2012 ஆம் ஆண்டு T-20 போட்டிகளில் காட்டிய சகலதுறை பெறுபேறுகள் ESPN Cricinfo குழுமத்தால் அந்த ஆண்டுக்கான சிறந்த வீரர்கள் கொண்ட T-20 அணியில் பெயரிடப்பட்டு இருந்தார்



யுவராஜ். அதனை தொடர்ந்து நடைபெற்ற ஆஸ்திரேலிய அணியுடனான ஒருநாள் மற்றும் T-20 தொடரில் அணியில் இணைத்துக்கொள்ளப்பட்ட யுவராஜ் சிங் T-20 போட்டி ஒன்றில் 35 பந்துகளில் 77 ஓட்டங்கள் குவித்து இந்திய அணி தோல்வியை தழுவ போகிறது என்ற நிலையில் இருந்த போட்டியை இந்திய அணிக்கு வென்று கொடுத்தார்.




ஆனாலும் மீண்டும் ஒருநாள் போட்டிகளில் சொதப்பினார். 4 போட்டிகளில் மொத்தமாக 19 ஓட்டங்கள் மாத்திரமே குவித்தார் யுவராஜ். தொடர்ந்து நடைபெற்ற மேற்கிந்திய தீவுகள், தென்னாபிரிக்க அணிகளுடனான தொடரிலும் சொதப்ப அணியில் இருந்து கழற்றிவிடப்பட்டார் யுவராஜ். அடுத்து நியூசிலாந்து பயணம் மேற்கொண்ட இந்திய அணியில் இருந்து கழற்றி விடப்பட்டார். அத்தோடு 2014 இல் பங்களாதேஷ் இல் நடைபெற்ற ஆசியக்கோப்பயிலும் அணியில் இணைத்துக்கொள்ளப்படவில்லை. ஆனாலும் அதே வருடம் பங்களாதேஷ் இல் நடைபெற்ற T-20 உலககோப்பைக்கான இந்திய அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

T-20 உலகக்கோப்பைகள் யுவராஜ் சிங் ஐ எப்போதும் சிகரம் தொட வைத்த சிறகுகள். ஆனாலும் இந்த தொடர் முற்றிலும் மாறாக இருந்தது. ஆஸ்திரேலியாவுடனான போட்டியில் மாத்திரம் அரைச்சதம் கடந்தார். மற்றைய போட்டிகளில் சொதப்பினார். பிடியெடுப்புகளை தவற விட்டார். குறிப்பாக இலங்கை அணிக்கு எதிரான இறுதிப்போட்டியில் 20 பந்துகளில் வெறுமனே 12 ஓட்டங்களை பெற்று இந்திய அணியின் கிண்ணக்கனவை உடைத்தார். கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளானார்.




உதயசூரியன் மெல்ல மெல்ல மறைய தொடங்கி கொண்டு இருந்தது.....